பக்கங்கள் : பதின்நான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 25 வியாழக்கிழமை (08.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 192

# ஒஸ்லோ சந்திப்பில் அரசு-புலிகள் இன்று நேரடிச் சந்திப்பு இல்லை

## நோர்வேக்கு செவ்வாயன்று திட்டவட்டமாகவே தெரிவிப்பு

- ஒஸ்லோவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஒஸ்லோ,ஜூன்8

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக ஒஸ்லோ வந்திருக்கும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டக்குழு இன்று அவ்விடயம் குறித்து நோர்வே உயர் குழுவுடன் பேச்சு நடத்துகிறது. இப்பேச்சு நாளையும் தொடரும்.

எனினும், இவ்விடயம் குறித்து ஆராய்வதற்காக ஒஸ்லோ வந்திருக்கும் இலங்கை அரசுத் தூதுக்குழுவினருடன் புலிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு மேசையிலிருந்து பேச மாட்டார்கள். இதனைத் திட்டவட்டமாகவே புலிகளின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் நோர்வே உயர்மட்டத்தினருக்குத் தெரிவித்து விட்டனர் என நம்பகரமாக அறியவந்தது.

நேற்றுமுன்தினம் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நோர்வே அரசுத்தரப்பினருடன் இரண்டுசுற்றுப் பேச்சுகளை நடத்தினர். இலங்கை சமாதான முயற்சிகளுக்குப் பொறுப்பான விசேட பிரதிநிதி ஹன்ஸன் போவருடன் முதலிலும் பின்னர் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், ஹன்ஸன் போவர் ஆகியோருடன் இரண்டாவது தடவையுமாக சுமார் மூன்று மணிநேரம் புலிகள் உரையாடினர்.

இந்த உரையாடல்களில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், புலிகளின் சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் பங்குபற்றினர்.

முக்கியமான மூன்று விடயங்கள் குறித்துப் புலிகள் தமது கருத்துக்களைத் தெரிவித்ததாகவும் உறுதியாகவும் திடமாகவும் இந்தச் சந்திப்பின்போது தெரிவித்தனர் என அறிய வந்தது.

★ "கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் குறித்துப் பேசுவதற்காக நோர்வே அழைத்ததால் ஒஸ்லோவந்துள்ளோம். அது

(2ஆம் பக்கம் பார்க்க)

# கோப்பாய் பாலத்தடியில் நேற்று மேலும் ஓர் ஆணின் சடலம் மீட்பு!

## மனிதப் புதைகுழி இருக்கலாமென அச்சம்

கைதடி,ஜூன்8

**கோப்பாய் பாலத்தடியில் நேற்று மேலும் ஒரு சடலம் மீட்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் மேலும் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது. இதே பகுதியில் நேற்றுமுன்தினம் பூசகர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.**

**இரு சடலங்கள் மீட்கப்பட்ட நிலையில், அப்பகுதியில் மனிதப் புதைகுழி இருக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.**

கடந்தமாதம் 26ஆம் திகதி கைதடி வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்திற்கு பூசைக்காகச் சென்றவரான வைத்தீஸ்வரசர்மா வெங்கடகிருஷ்ணசர்மா (வயது 50) என்பவர் காணாமற்போயிருந்தார். கோப்பாய் பாலத்தடியில் புதைக்கப்பட்டிருந்த அவரது சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது.

மணல் அகழ்வதற்காக நேற்றுமுன்தினம் அப்பகுதிக்குச் சென்றவர்கள் சடலமொன்று புதைக்கப்பட்டிருந்ததைக் கண்டு பொலீஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். இதனையடுத்தே பூசகரின் சடலம் மீட்கப்பட்டது.

இந்நிலையில், அங்கு நேற்றும் ஆண் ஒருவரது சடலம் மீட்கப்பட்டது.

இந்தச் சடலம் தோண்டி எடுக்கப்பட்டபோது அங்கு சமுகமளித்திருந்தவர்களில் ஒருவரான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய [illegible]ணைப்பாளர் ரி. சுவேந்திரராசா கூறியதாவது:-

கோப்பாய் - கைதடி வீதியிலிருந்து சுமார்

(2ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக போராட்டம் நடத்த ஐ.தே.க. முடிவு

கொழும்பு, ஜூன் 08

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அராஜகச் செயற்பாடுகள், வாழ்க்கைச் செலவுவீத அதிகரிப்பு உட்பட்ட பல்வேறு விடயங்களை எதிர்த்து மக்களை ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் பாரிய அளவில் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

தற்போதைய அரசு பதவியேற்று ஆறு மாதகாலத்திற்குள் பல்வேறு அராஜகச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்றும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.வாகரையில் இளைஞர் மீது சூடு

மட்டக்களப்பிலிருந்து வாகரைக்குச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றை தியாவெட்டுவான் பகுதியில் வழிமறித்த இனந்தெரியாத நபர்கள் அதிலிருந்த இளைஞர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கதிரவெளியைச் சேர்ந்த ஆசிரியரான சதீஸ்வரன் (வயது-25) என்பவரே சூட்டுக்கு இலக்காகிப் படுகாயம் அடைந்தார். மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள இவரது உடல்நிலை மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகக் கூறப்பட்டது. (க)

### மட்டு. புலிகள் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதல்

## நிலக்கண்ணியில் சிக்கிச் சிதறியது டிராக்டர் சிவிலியன்கள் எண்மர் பலி; 14 பேர் படுகாயம்

மட்டக்களப்பு, ஜூன்8

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வடமுனையில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்தில் பொதுமக்கள் எட்டுப்பேர் கொல்லப் பட்டனர்; 14 பேர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் ஏழுபேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை பத்துமணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லையில் வெலிகந்தைக்கு அருகில் உள்ள வடமுனை மியாங்குளம் சந்தையிலிருந்து உழவு இயந்திரத்தில் சென்றுகொண்டிருந்தவர்களே இக்கண்ணிவெடியில் சிக்கினர்.

இந்தப் பகுதியில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவலரண்கள் இருப்பதால், புலிகளின் முக்கியஸ்தர்களை இலக்குவைத்துப் படையினர் அல்லது ஒட்டுக்குழுவினர்

(10ஆம் பக்கம் பார்க்க)

### பிணைகோர வசதியாக விரைவில் சட்டத்திருத்தம்

## அரசின் உறுதிமொழியை அடுத்து கைதிகளின் போராட்டம் நிறுத்தம்!

கொழும்பு, ஜூன் 08

குடிவரவு - குடியகல்வு சட்டத்தின்கீழ் - பிணை கோரவழியின்றி - நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகள் தாங்கள் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுடன் இடைநிறுத்தியிருக்கின்றனர்.

நீண்டகாலம் சிறையில் வாடும் இந்தக் கைதிகளின் விடுதலைக்கு வழிசெய்ய வசதியாகத் தற்போது நடைமுறையில் உள்ள குடிவரவு - குடியகல்வுச் சட்டத்தில் வேண்டிய திருத்தங்கள் விரைவில் செய்யப்படும் என்று அரசுத் தரப்பில் [illegible]

(2ஆம் பக்கம் பார்க்க)

## அரச புலனாய்வுப் பிரிவினரே ராகம தாக்குதலை நடத்தினர்

### தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

கொழும்பை அண்டியுள்ள ராகம பகுதியில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலானது ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவிலிருந்து இது தொடர்பாக சு.ப. தமிழ்ச்செல்வன் கூறியுள்ளதாவது:-

கொழும்பில் நடத்தப்பட்டுள்ள கிளைமோர் தாக்குதலானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்காக ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் நடத்தப்பட்ட திட்டமிட்ட ஒரு தாக்குத

(2ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குவியும் அகதிகளால் மண்டபம் முகாமில் இடநெருக்கடி

இராமேஸ்வரம், ஜூன் 08

இலங்கையிலிருந்து மேலும் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 19 அகதிகள் நேற்று இராமேஸ்வரம் வந்துள்ளனர்.

மூன்று படகுகளில் வந்த இந்த அகதிகள் இராமேஸ்வரம் பாம்பன்குந்துகால் கடற்கரையில் வந்திறங்கினர். பொலீஸாரின் விசாரணைகளின் பின்னர் இந்த அகதிகள் மண்டபம் முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

இந்த அகதிகளுடன், இவ்வருடத்தில் இதுவரை இலங்கையிலிருந்து அகதிகளாகத் தமிழகம் வந்தோரின் எண்ணிக்கை மூவாயிரத்தைத் தாண்டியுள்ளது. அகதிகளின் வருகை அதிகரித்துள்ளதையடுத்து தமிழக கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்று முன்தினம் மண்டபம் அகதிகள் முகாமுக்குச் சென்றிருந்த இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் காங்கிரஸ் கட்சிகளின் சட்டப் பேரவை உறுப்பினர்களான குணசேகரன் மற்றும் இராமசாமி ஆகியோர் அகதி முகாம்களில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக் காட்டியிருந்தனர். அகதிகளுக்கு மேலதிக வசதிகள் செய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரி இருந்தனர்.

(க)

## கோப்பாய் பாலத்தடியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

400 மீற்றர்கள் தூரத்தில் நேற்றுமுன்தினம் அர்ச்சகரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று சாவகச்சேரி நீதிவான் அப்பகுதியைப் பார்வையிட அழைப்பு விடுத்திருந்தார். அதனை ஏற்று நாம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் அங்கு சென்றோம். அப்போது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், அப்பகுதி கிராம சேவையாளர் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சிறிது நேரத்தில் சென்றுவிட்டனர்.

அங்கு சந்தேகத்திற்கிடமான இடமொன்று நீதிவானின் பணிப்பின்பேரில் தோண்டப்பட்டது. அதில் ஆணின் சடலமொன்று மீட்கப்பட்டது. வீதியிலிருந்து சுமார் 200 மீற்றர்கள் தொலைவில் இச் சடலம் புதைக்கப்பட்டிருந்தது.

சுமார் மூன்று வாரங்களின் முன்னர் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படும் இந்தச் சடலத்தில் வெள்ளை நிறத்தில் கறுப்புக்கோடுகள் போட்ட மேற்சட்டையும், கறுப்புக் காற்சட்டையும் இருந்தன. சடலம் சேதமடைந்திருந்தது.

அப்பகுதியில் மேலும் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்படும்படியான இடங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு பிராந்திய இணைப்பாளர் கூறினார்.

இதேவேளை - சடலங்கள் மீட்கப்பட்ட இடத்தின் பாதுகாப்புப் பொறுப்பு சாவகச்சேரி நீதிவானின் பணிப்பின்பேரில் இராணுவப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று மீட்கப்பட்ட சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்ட நீதிவான், கடந்த ஒரு மாதகாலப் பகுதியில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் சாவகச்சேரி நீதிமன்றத்துடனோ, பொலீஸாருடனோ அல்லது யாழ். போதனா வைத்தியசாலையுடனோ தொடர்புகொண்டு சடலத்தை அடையாளம் காண உதவுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில், சடலங்கள் மீட்கப்பட்ட பகுதியில் மனிதப் புதைகுழி இருக்கலாமென பொதுமக்கள் மத்தியில் அச்சம் எழுந்துள்ளது. இந்நிலையில் அங்கு மேலும் தேடும் பணிகள் மேற்கொள்ளப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. (12-75)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாகும்.

தமிழ் மக்களுக்கு எதிராகச் சிங்கள மக்களைத் தூண்டிவிடுகின்ற ஒரு முயற்சியாகும்.

இத்தாக்குதல் நடத்தப்பட்ட சூழ்நிலையானது தாக்குதலின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. தோல்வியடைந்துவிட்ட அரசாங்கமாக வர்ணிக்கப்படுகிற ஸ்ரீலங்கா அரசானது தடைகளுக்கு அப்பால் தமிழீழ விடுதலைப் புலிகளை இழிவு செய்வதற்காக இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்கிறது.

இதேபோல்தான் வெலிகந்தை ஓமடியாமடுவிலும் தாக்குதலை நடத்தினார்கள். ஐரோப்பிய ஒன்றியத் தடை அறிவிப்பைத் தொடர்ந்து ஓமடியாமடுத் தாக்குதலை நடத்தினார்கள்.

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், துணை இராணுவக் குழுவினரும் குவிக்கப்பட்டு அப்பாவி சிங்களப் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தினர். இலங்கை இராணுவத் தலைமைப்பீடத்தின் வழிகாட்டுதலின்கீழ் இத்திட்டமிட்ட தாக்குதலை நடத்தினார்கள் என்றார் சு.ப. தமிழ்செல்வன். (க)

## சுண்டுக்குளி மாணவிகளுக்கு விசேட வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன்8

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 9,11 வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவிகளுக்கான விசேட வகுப்புகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் காலை 8.15 தொடக்கம் 1.45 மணிவரை நடைபெறும்.

அவ்வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவிகளைப் பாடசாலைச் சீருடையில் சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

## இளைஞனைக் காணவில்லை

அதிகாலை வீட்டிலிருந்து வேலைக்குப் புறப்பட்டுச்சென்ற இளைஞர் ஒருவர் வீடு திரும்பவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் உறவினர்களால் நேற்றுமுன்தினம் முறையிடப்பட்டுள்ளது.

சூரியவளவு சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த பரலோகராஜா திலீபன் என்ற 18 வயது இளைஞரே இவ்வாறு காணாமற்போனவராவார்.

இவர் கடந்த திங்கட்கிழமை சுழிபுரத்தில் உள்ள வீட்டிலிருந்து அதிகாலை 5.45 மணியளவில் யாழ். நல்லூரடிப் பகுதிக்கு தச்சுத் தொழிலுக்கென புறப்பட்டபோதே காணாமற்போனதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (12-190)

## அடகுநகை ஏலவிற்பனை

ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ். மாவட்டக் கிளைகளில் 31.03.2005இற்கு முன்னர் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத மற்றும் காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்தவர்களின் அடகுப் பொருள்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய கிளைகளில் அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத பொருள்களே ஏலத்தில் விடப்படவுள்ளன.

எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் கிளையிலேயே ஏலம் நடத்தப்படும் என்று வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார். (202)

## ஒஸ்லோ சந்திப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து நோர்வேயுடனேயே பேசுவோம். அரசியல் தலைமைகள் கூட இடம்பெறாமல் வெறும் அதிகாரிகள் மட்டத்தில் வந்திருக்கும் இலங்கை அரசுக் குழுவினருடன் இவ்விவகாரம் குறித்து ஒன்றாக அமர்ந்து பேசுவதற்கு நாம் தயாரில்லை. அப்படிப் பேசுவதற்கு எமது தலைமை எமக்கு அனுமதி வழங்கவில்லை'' - இது புலிகள் தெரிவித்த முதல் விடயம்.

★ ஐரோப்பிய ஒன்றியத் தடை மூலம் எங்கள் அமைப்பைத் தடைசெய்துள்ள நாடுகளின் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுவது பொருத்தமற்றது. எனவே சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுவில் பங்குபற்றுவதற்கான நடுநிலைத் தகுதி பங்கப்பட்டுள்ளது. எனவே இந்த விடயத்தில் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.''- இது புலிகள் வற்புறுத்திய இரண்டாவது விடயம்.

கண்காணிப்புக்குழுவின் பங்கு, பணி மற்றும் கடற்கண்காணிப்புப் பணி ஆகியவை தொடர்பான வேறு விடயங்களையும் புலிகள் நோர்வேத் தரப்பிற்குத் தெரியப்படுத்தினர்.

இந்த விடயங்கள் குறித்து இன்றும் நாளையும் பேச்சுகளின் போது புலிகள் கடுமையான- இறுக்கமான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவர் என ஒஸ்லோவில் புலிகளின் தூதுக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் காரணமாகவும், இந்தச் சந்திப்புகளில் புலிகளும், இலங்கை அரசுப் பிரதிநிதிகளும் ஒரு மேசையில் அமரமாட்டார்கள் என்ற நிலைப்பாடு காரணமாகவும் இந்தச் சந்திப்புகளில் எதிர்பார்த்த அளவிற்குச் சாதகமான பெறுபேறுகள் எட்டப்படுவதற்கு வாய்ப்பே இல்லை என்று தெரியவருகின்றது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து முடிவு செய்வதற்கான இன்றைய சந்திப்புகளை ஒஸ்லோ நகருக்கு வெளியே- ஒஸ்லோ நகரத்திலிருந்து 25 கிலோ மீற்றருக்கு அப்பால்- உள்ள ஓர் இடத்தில் நடத்துவதற்கு நோர்வே அதிகாரிகள் ஒழுங்கு செய்துள்ளனர். (உ)

## அரசின் உறுதிமொழியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டதை அடுத்தே கைதிகள் நேற்றுடன் தங்கள் போராட்டத்தை இடைநிறுத்தினர்.

நீதியமைச்சர் அமரசிறி தொடங்கொட நாடாளுமன்றத்தில் அளித்த இந்த உறுதிமொழியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் நேற்றுக் கைதிகளை நேரில் சந்தித்து எடுத்துக்கூறியதற்குப் பிறகே அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட முன்வந்தனர்.

சட்ட விரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்ல முயற்சித்த சமயம் கைது செய்யப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட கைதிகள் வழக்கு விசாரணையோ, பிணை மனு கோரும் வாய்ப்புகளோ இன்றி நீண்ட காலம் நீர்கொழும்புச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் ஒருவரான தமிழ் யுவதி அங்கு உயிரிழந்தமைக்கு சிறைச்சாலை அதிகாரிகளின் அசமந்தமே காரணம் என்று குற்றஞ்சாட்டி அதற்குக் கண்டனம் தெரிவித்தும், - இது தொடர்பான நீதி விசாரணைகளை நடத்துமாறு கோரியும், - குடிவரவு - குடியகல்வு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஏனைய கைதிகள் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தைக் கடந்த திங்களன்று ஆரம்பித்தனர்.

நேற்று நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நடைபெற்ற சமயம் இந்தக் கைதிகள் விவகாரம் குறித்துக் கண்டனக் குரல்கள் எழுந்தன.

இந்தக் கைதிகளின் அவல நிலை பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் மாவை சோ. சேனாதிராஜா சபையில் கேள்விகளை எழுப்பினார்.

இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையில் அறிக்கை ஒன்றையும் விடுத்தது.

கைதிகள் நிலை தொடர்பாக நீதி அமைச்சர் அமரசிறி தொடங்கொட அப்போது விளக்கமளித்தார்.

நீர்கொழும்புச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் நீதிமன்றத்திடம் பிணை மனுக் கோருவதற்கு வசதியாகவும், சட்ட நடவடிக்கைகளைத் தொடர வழி செய்ய வசதியாகவும் குடிவரவு - குடியகல்வுச் சட்டத்தில் திருத்தங்கள் விரைவில் கொண்டு வரப்படவுள்ளன என்று அவர் உறுதி அளித்தார்.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், என். ரவிராஜ், சிவநாதன் கிஷோர் ஆகியோர் நேற்று நீர்கொழும்பு சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைச் சந்தித்தனர். அத்துடன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட உறவினர்களையும் சநதித்துப் பேசினர். இதனையடுத்தே உண்ணாவிரதப் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவதற்கு சிறைக் கைதிகள் தீர்மானித்தனர்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறியதாவது:-

''நீர்கொழும்புச் சிறையிலுள்ள கைதிகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் நேற்று விசேட அறிக்கையொன்றை விடுத்தது. இதன்போது, பதிலளித்த அமைச்சர்மார் பிணையில் இந்தக் கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உறுதியளித்தார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி நீதிமன்றத்தில் இது தொடர்பான விடயம் ஆராயப்பட்டு முதற் கட்டமாக 194 கைதிகளை பிணையில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது. இந்த உறுதியை நாம் கைதிகளிடம் தெரிவித்தோம். இதனை ஏற்றுக் கொண்ட கைதிகள் தற்காலிகமாக இதனை இடைநிறுத்துவதாகக் கூறினர். 19 ஆம் திகதி அரசு உரிய நடவடிக்கை எடுக்கா விட்டால் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத் துதுவர் என்று கைதிகள் திட்ட வட்டமாகத் தெரிவித்திருக்கின்றனர்.''

- இவ்வாறு கூறினார் சுரேஷ் பிறேமச்சந்திரன் எம்.பி. (க)

## அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை அமைச்சர் டக்ளஸ் சந்தித்தார்

யாழ்ப்பாணம, ஜூன்8

அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். அடைக்கலமாதா தேவாலயம், யாழ். நாவாந்துறை புனித நிக்கலஸ் தேவாலயம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா நேற்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக, சமூக சேவைகள் அமைச்சு நேற்று பிற்பகல் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக்குறிப்பு வருமாறு:-

இந்தச் சந்திப்பின்போது குறிப்பிட்டபகுதி மக்கள் தாங்கள் முகம்கொடுத்து வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சருக்கு எடுத்துரைத்தனர்.

குறிப்பாக, தங்களது பாதுகாப்புக்கான உத்தரவாதம் அமைச்சர் அவர்களால் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் தாங்கள் மீளக் குடியேறத் தயாராக இருப்பதாக அம்மக்கள் ஏகமனதாகக் கூறியதையடுத்து, தான் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பொறுப்புமிக்க ஓர் அமைச்சர் என்பதால், அரசாங்கத் தரப்பில் இருந்து அம்மக்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை வழங்க முடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு தெரிவித்தார்.

இதனை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்ட அல்லைப்பிட்டி மக்கள், தங்களது அடிப்படைப் பிரச்சினைகளையும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

குறிப்பாக, மருத்துவ, மின்சார, போக்குவரத்து, சிறுவர்களுக்கான கல்வி போன்ற வசதிகளை வழங்குமாறும் தங்களால் இழக்கப்பட்டுள்ள இழப்பீடுகளை மீள வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் தங்களது எதிர்கால வாழ்க்கைக்கான உரிய திட்டங்களை வகுத்துத் தருமாறும் கேட்டுக்கொண்டனர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அல்லைப்பிட்டிப் பகுதியில் ஏற்கனவே இருந்து வந்த அடிப்படை வசதிகள் அனைத்தும் அதே விதமாக வழங்கப்படும் என்றும் -

ஏனைய தேவைகள் அனைத்தும் கட்டம் கட்டமாகப் பூர்த்திசெய்து கொடுக்கப்படும் என்றும் - தெரிவித்ததுடன், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளை உடனடியாக அதே இடத்தில் வைத்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு உரிய பணிப்புரைகளை வழங்கினார்.

அல்லைப்பிட்டி மக்களின் இழப்பீடுகள் மீளப் பெற்றுக்கொடுக்கப்படும் அதேசமயம் அவர்களின் எதிர்கால சுபீட்சமான வாழ்க்கைக்கு ஜீவனோபாய வழிமுறைகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என்றும் - நிவாரண உதவிகளை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடுகாள் மேற்கொள்ளப்படுவதாகவும் மேலும் தெரிவித்த அமைச்சர், அதற்கான பணிப்புரைகளையும் உரிய அரச அதிகாரிகளுக்கு உடன் வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது யாழ். அடைக்கலமாதா தேவாலய பங்குத்தந்தை பயஸ் அடிகளார், நாவாந்துறை நிக்கலஸ் தேவாலய பங்குத்தந்தை மரிய இளம்பருதி அடிகளார், கிராம சேவையாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் உடன் இருந்ததுடன் அவர்களுடனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. - என்றுள்ளது.



அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். அடைக்கலமாதா தேவாலயம் மற்றும் நாவாந்துறை புனித நிக்கலஸ் தேவாலயம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களை சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படம் இது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பங்குத்தந்தை ஒருவருடன் பேச்சு நடத்துவதை முதலாவது படத்திலும், பொதுமக்களுடனான சந்திப்பில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:-சமூக சேவைகள் அமைச்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# வெள்ளைக் கனவான்களின் சிறுமைத் தனச் செயற்பாடு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்திருப்பது ஈழத் தமிழர்களை மட்டுமல்லாது புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களைக்கூட விசனத்திலும், எரிச்சலிலும், சீற்றத்திலும், தாங்கொணாக் கோபத்திலும் ஆழ்த்தியிருக்கின்றது.

ஈழத் தமிழருக்கு நியாயம் செய்யவேண்டிய கடப்பாடும், பொறுப்பும், கட்டாயமும் உடைய ஒரு தரப்பே இந்த அநீதியைத் தமக்கு எதிராக இழைத்தது என்ற ஆதங்கமும், குமைச்சலும் ஈழத் தமிழர்களின் மனதை ஆழ நெருடிக்கொண்டிருப்பதை இங்கு குறிப் பிட்டேயாக வேண்டும்

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் பெற்றுள்ள இருபத்தியைந்து நாடுகளையும் அவை இத்தடை வருவதை விரும்பியோ, விரும்பாமலோ உள்ள நிலையில் ஈழத் தமிழருக்கு எதிரான இத்தகைய ஒரு முடிவுக்கு - தீர்மானத்துக்கு - வருவதற்குக் கட்டாயப்படுத்தி, அழுத்தம் கொடுத்து, நெருக்குதல் தந்த தரப்பு சர்வதேசப் பொலீஸ்காரனான அமெரிக்காவே என்பது உலகறிந்த இரகசியம்.

'வீடெரிக்கும் இராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கும் மந்திரி போல' இந்த விடயத்தில் அமெரிக்காவின் பின்னால் நின்று, தூண்டி விட்டுக் கொண்டிருந்தது பிரிட்டனே என்பதும் தெரிந்த சங்கதியே.

ஐரோப்பிய ஒன்றியத்தினுள் ஒரு நாடான பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் தீர்மானத்துக்கு வருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தான் அத்தகைய ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டு, அதே வழியில் ஐரோப்பிய ஒன்றியத்தைத் திருப்புவதற்குத் தலைகீழாக நின்று முயற்சித்து இப்போது அதில் வெற்றியும் கண்டிருக்கின்றது.

உண்மையில் ஈழத் தமிழர்கள் இன்று சிங்கள - பௌத்த பேரினவாதிகளினால் இவ்வாறு கொடூரமாக அடக்கப்பட்டு, அதிலிருந்து மீளுவதற்காக பல்வேறு போராட்டங்களை நடத்தி, இன்று அது பெரும் ஆயுதப் போராட்டமாக - வன்முறைச் சுழலாக - வெடித்து, பல்லாயிரக் கணக்கான உயிர்களையும் காவுகொண்டு, பல கோடி ரூபா உடைமைகளைத் துவம்சம் செய்து, பேரழிவுகளைத் தந்து நிற்கும் நிலைமை உருவாகியிருக்கின்றது என்றால் அதற்கு காரணகர்த்தா - மூலம் - பிரிட்டன்தான்.

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைத் தீவின் மீது அந்நியர் - முதல் முதலில் போர்த்துக்கேயர் - காலடி எடுத்து வைத்தபோது இந்தத் தீவில் தமிழர்களும், சிங்களவர்களும் தமக்கெனத் தனித்தனியாக வரையறை செய்யப்பட்ட தாயக பூமியில், தனியான பண்பாடு, கலாசாரம், வாழ்வியல் முறைகள், மொழி, ஆட்சி முறைமை ஆகிய தனித்துவப் பண்புகளோடு, தனித் தனி இராச்சியங்களின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்ததைக் கண்டனர்.

பிற்காலத்தில் தென்கிழக்காசியப் பிராந்தியத்தைத் தனது காலனித்துவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், தனது நிர்வாக வசதிக்காக இந்தத் தீவின் இரு பெரும் இனங்களும் காலங்காலமாகத் தனித்தனியாக வைத்திருந்த இராஜ்ஜியங்களை ஒன்றாக்கியது. கோல்புறூக் - கமறொன் திருத்தங்கள் மூலம் 1833 இல் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தினால் சிறுபான்மை இன மக்களின் தாயகம், பெரும்பான்மைச் சிங்களவர்களின் தாயகத்தோடு பலவந்தமாக ஒன்றிணைக்கப்பட்டது.

இந்த இணைப்பின் அடிப்படையில், சுமார் 115 ஆண்டுகள் இலங்கையைத் தனது காலனித்துவ ஆட்சியின் கீழ் ஒற்றை ஆட்சி முறைமைக்கு அமைய வைத்திருந்த பிரிட்டன், உலகப் போர் நெருக்கடிகளுக்கு மத்தியில் இலங்கை உட்பட தென்கிழக்காசிய நாடுகளில் தனது காலனித்துவப் பிடியை விட்டு விட்டு ஓடியபோது, தனது நிர்வாக வசதிக்காகத் தான் ஏற்படுத்திய இணைப்பை அப்படியே விட்டு விட்டுச் சென்றதால் சிறுபான்மையினரான தமிழர்களின் அரசியல், வாழ்வியல், இனப் பண்பியல் உரிமைகள் அனைத்தும் சிங்களப் பெரும்பான்மையினரின் அதிகார அடக்கு முறைத் தனத்தின் கீழ் அடிமை வசமாயிற்று.

அதிலிருந்து மீளுவதற்குத்தான் ஈழத் தமிழர்களின் உயிர்த்தியாகமும், உயர் ஈகமும் நிறைந்த இந்தப் போராட்டம்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தினால் பலவந்தமாக ஈழத் தமிழர்களின் தன்னாட்சி இறைமை பறிக்கப்பட்டு பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கைத் தீவைச் சூறையாடிச் சுரண்டும் நோக்கோடு தாங்கள் ஆக்கிரமித்தபோது விட்ட தவறின் பெறுபேறையே, இன்று இலங்கைத் தீவு அனுபவித்துக் கொண்டிருக்கின்றது என்பது பிரிட்டிஷாருக்குத் தெரியாத ஒன்றல்ல.

தாங்கள் விட்ட தவறைத் திருத்தி நிவர்த்தி செய்வதற்காகவே ஈழத் தமிழர்கள் இந்த இரத்தம் சிந்தும் நியாயப் போரை உன்னதச் சிறப்போடு முன்னெடுக்கிறார்கள் என்பதும் பிரிட்டனுக்குப் புரியாததல்ல.

ஈழத் தமிழர்களுக்குத் தாம் இழைத்த அநீதியே இன்று இலங்கைத் தீவை பெரும் சாம்பல் மேடாக்கியுள்ளது என்ற உண்மை பிரிட்டிஷாருக்குப் புரிந்திருந்தும் கூட, இந்த இறுதிச் சமயத்தில் தன்னும், முன்னர் ஈழத் தமிழர்களுக்குத் தாங்கள் இழைத்த தவறை நிவர்த்தி செய்யும் விதத்தில் தாங்கள் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வராமல் போனதும் -

அதற்கு மாறாக, ஈழத் தமிழர்களின் நியாயப் போராட்டத்தைப் 'பயங்கரவாதமாக' கொச்சைப்படுத்தி, அந்த மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்ற புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வைக்க தலைகீழாக நின்றதன் மூலமும் -

'வெள்ளைக் கனவான்கள்' என்று முன்பு ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்ட மதிப்பை சிறுமைப்படுத்திக் கெடுத்திருக்கின்றது பிரிட்டன்.

பிரிட்டன் இழைத்த கெடுதியின் மேலும் விவரத்தை நாளையும் இப்பத்தியில் பார்ப்போம்.



நோர்வேக்கு விஜயம் செய்துள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் எரிக்சொல்ஹெய்மை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# கழிவு மூலம் செயற்கைப் பசளை தயாரிப்பு: தரமானது என விவசாய பீடம் அங்கீகாரம்

## டிக்கள் கொள்வனவு செய்யலாம் என்கிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம்,ஜூன் 8

காக்கைதீவிலுள்ள பசளை செய் நிலையத்தில் உற்பத்தியாகும் இயற்கைப் பசளை விவசாயிகளுக்கு மலிவு விலையில் விற்பனை செய்யப்படவுள்ளதென யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபை, காக்கைதீவில் கொட்டப்படும் கழிவுகளைப் பயன்படுத்தி இயற்கைப் பசளை தயாரித்து வருகின்றது. இப்பசளையில் நைதரசன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாஸ் ஆகிய மூலகங்கள் செறிந்திருப்பதனால் இது தரமான பசளை என யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி உறுதி செய்துள்ளார்.

இப்பசளை டிராக்டர் லோட் ஆயிரம் ரூபா வீதம் விற்பனை செய்யப்படுவதாகவும் -

எவ்வித தயக்கமுமின்றி இப் பசளையைப் பெற்று விவசாயிகள் பயன்படுத்தலாம் என்றும் -

யாழ்.மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார். (202)

# அரச அலுவலகங்கள், பாடசாலைகள் இயங்கும் நேரம் மாற்றியமைக்கப்படும்

குருநகர்,ஜூன் 8

அரச ஊழியர்களுக்கான கடமை நேரம் மற்றும் பாடசாலைகள் இயங்கும் நேரம் என்பனவற்றினை மாற்றியமைக்கும் புதிய சுற்றறிக்கையொன்றை பொது நிர்வாகம் மற்றும் வீடமைப்பு விவகாரங்களுக்கான அமைச்சு வெளியிட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர் டி.திசநாயகாவால் இப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றறிக்கையின்படி -

அலுவலக நேரம் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.15 மணிவரை என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அலுவலகங்களில் பணிபுரியும் சிற்றூழியர்கள் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4.45 மணிவரை பணிபுரிய வேண்டும். கடமை நேரத்தில் 30 நிமிடங்களை மதிய உணவிற்காகச் செலவிட முடியும்.

சகல பாடசாலைகளும் காலை 7.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை இயங்கும். பாடசாலை நேர மாற்றம் தொடர்பாகக் கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய அறிவிப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்றும் அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (51)

# தமிழகத்துக்கு மேலும் 83 அகதிகள் வருகை

சென்னை,ஜூன்7

இலங்கை திருகோணமலை, திருக்கடலூர், பள்ளி தோட்டம் மற்றும் யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 27 பெண்கள் உட்பட 83 அகதிகள் கடந்த திங்கட்கிழமை தலைமன்னார் கடற்கரையிலிருந்து நான்கு படகில் புறப்பட்டு நள்ளிரவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு வந்தனர். தனுஷ்கோடி பொலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கவேல் அகதிகளை விசாரணை செய்து மண்டபம் முகாமிற்கு அனுப்பி வைத்தார்.

# திருக்கேதீஸ்வர பக்தர்கள் மீது கெடுபிடிகளை நிறுத்துக!

## ஜனாதிபதியிடம் இந்துமாமன்றம் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்8

தற்போது இடம்பெற்றுவரும் திருக்கேதீஸ்வரத் திருத்தல மஹோற்சவத்தில் கலந்துகொள்ளச் செல்லும் பக்தர்கள் மீது அரச படைகள் பிரயோகிக்கும் கெடுபிடிகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை இந்துமா மன்றம் ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

திருக்கேதீஸ்வரத்தில் இடம்பெற்று வரும் உற்சவங்களில் இன்று வியாழக்கிழமை இரதோற்சவமும் நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

உற்சவத்தில் கலந்துகொள்ளச் செல்லும் பக்தர்களைச் சோதனை என்ற வகையில் அரச படைகள் கெடுபிடிக்குள்ளாக்குவதாகப் பக்தர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்தக் கெடுபிடிகளை நிறுத்திப் பக்தர்கள் சுதந்திரமாக உற்சவத்தில் கலந்துகொள்ள உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்துமா மன்றம் அக்கோரிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

(மற்றோர் செய்தி 5ஆம் பக்கத்தில்)

# வரட்சியை அடுத்து தீவகத்தில் குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

மண்டைதீவு,ஜூன்8

தீவுப்பகுதியில் நிலவும் கடும் வரட்சியை அடுத்து, குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு குடிதண்ணீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென, யாழ்.மாவட்ட செயலகத்தின் அனுசரணையுடன் தீவுப் பகுதியில் உள்ள பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் இது தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ளன.

கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வருடமும் 'பவுஸர்' மூலம் குடிதண்ணீரை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் -

இது தொடர்பான பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் - தீவக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் - வேலணைப் பிரதேச சபையினால் ஏற்கனவே அமைக்கப்பட்ட நீர்த் தொட்டிகளைச் சுத்தப்படுத்தி வைக்குமாறு அந்தந்தப் பகுதிக் கிராம சேவையாளர் ஊடாகப் பொது மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். மண்டைதீவுப் பகுதியில் உள்ள மூன்று நீர்த் தொட்டிகளும் இவற்றுள் அடங்கும் என்றும் கூறப்பட்டது. (88)

## உதயவாக்கு

இகலோக சுகங்களால் பெறமுடியாத மனச்சாந்தி குமுறிக் கொந்தளியாத மனச்சான்றாலேயே கிடைக்கும்.
- ஷேக்ஸ்பியர்.

## நாளை

வைகாசி - 26
வெள்ளிக்கிழமை
08.06.2006
திதி : பிரயோதசி
பின்னிரவு : 12.35
நட்சத்திரம் : விசாகம்
பின்னிரவு : 05.26
சுபநேரம் : 05.52-07.22
ராகுகாலம் : 10.22-11.52



## சாயி சிந்தனை

### உங்களின் கசப்பான அனுபவம் நீங்கள் விதைத்த விதைகளினால் கிட்டியவையே

எண்ணங்கள் அகாயத்தைவிட விசாலமானவை. எல்லாச் சக்திகளையும் விட அதிகமான சக்தி கொண்டது. மின்சக்தியை விடவும் மிக நுணுக்கமானது. அவைகளை நாம் நன்றாகக் காணமுடியாவிட்டாலும் அதன் பலன்களை அனுபவிப்பதிலிருந்து தப்பமுடியாது. நல்லெண்ணங்களை வளர்ப்பதுதான் இன்று மிகவும் உயர்ந்த கல்விப் போதனையாகும். நமது எண்ணங்களுக்கேற்பவே நாம் பலன்களை அனுபவிக்கின்றோம் என்ற உண்மையை உணர வேண்டும். நாம் நச்சு விதைகளை விதைத்துவிட்டு அதிலிருந்து இனிய கனிகளைப் பெற வேண்டுமென எதிர்பார்க்கிறோம். இப்படிப்பட்ட நஞ்சை விதைத்து அதனால் எதிர்பார்த்த நற்பலன்கள் கிட்டவில்லையே என்று பிறரை நிந்திக்கமுற்படுவதுடன் கடவுளையும் குறைகூறத் தயங்குவதில்லை. உங்களுக்குக் கிடைக்கும் கசப்பான அனுபவங்களெனும் கனிகள் நீங்கள் விதைத்த விதைகளினால் கிட்டியவையே என்பதை மறந்து அந்தக் கசப்பான அனுபவத்தைக் கொடுத்ததற்காகக் கடவுளையும் நிந்திக்க முற்படுவது எவ்வளவு மதியீனம்! நல்ல விதைகளை விதைத்தால் நல்ல பலன்களை பெறலாம். (தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற முதுமொழியை நினைவு கொள்ளலாம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமந்தனாறு பிரதேசத்தில் மருத்துவ பரிசோதனைகள்

வட்டக்கச்சி,ஜூன் 8

கிளிநொச்சி பிரமந்தனாறு தியாகதீபம் திலீபன் மருத்துவமனை சேவையாளர்களால், இப்பிரதேசத்தில், நோய்களிலிருந்து மக்களைக் காத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இத்திட்டத்தின் ஒரு கட்டமாக அண்மையில் மயில்வாகனபுரம் கல்லாறு பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இனங்காணப்பட்ட நோய்களுக்கு மருத்துவ சேவையும் வழங்கப்பட்டது.

அத்துடன், பிரமந்தனாறு - புன்னை நீராவி பாடசாலைகளின் முதலுதவிப் பிரிவு மாணவர்களின் உதவியுடன் நோய்கள் வராது தடுக்கும் முறைகள் தொடர்பாக கண்ணகைபுரம், கல்லாறு ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மக்களுக்கு கருத்துட்டல்கள் நடத்தப்பட்டன. சுற்றுச்சூழல் சுத்திகரிப்பு, சூழலில் சுத்தம் பேணுதல் தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டதுடன் சிரமதானமும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை சிறப்பு மருத்துவப் போராளிகளான செவ்வானம் மற்றும் தாரகை ஆகியோர் மேற்கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (405-352)

# இடம்பெயர்ந்தோர் நிவாரணம்: பழுதடைந்த அரிசி விநியோகம்

புதுக்குடியிருப்பு,ஜூன்8

புதுக்குடியிருப்பு ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தால் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட அரிசி பாவனைக்கு உதவாத நிலையில் இருப்பதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வழங்கப்படும் நிவாரணத்தால் எந்தவிதமான பயன்பாடும் இல்லை எனவும் -

வழங்கப்படும் அரிசி பழுதடைந்துள்ளதால் தமது உணவுத் தேவைக்காகத் தனியார் கடைகளிலேயே அரிசியை வாங்கவேண்டியுள்ளது எனவும் - அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு உரியவர்களிடம் மக்கள் பல தடவை முறைப்பாடு செய்துள்ளனர் எனவும் -

ஆனால், உரியவர்கள் இவ்விடயம் தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்காமையால் மக்கள் கவலை அடைந்துள்ளனர் எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (353)

## நாச்சிக்குடாவில் பொதுக்கிணறு புனரமைப்பு

பரந்தன்,ஜூன்8

நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னி கிராமத்தில் 'போரூட்', அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் குடிதண்ணீர் பிரச்சினைகளை நீக்கும் நோக்குடன் ஆறு பொதுக்கிணறுகள் கட்டுவதற்கான ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

பூநகரி - முழங்காவில் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் பொ.சிவசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாச்சிக்குடா கிராம அலுவலர் உட்படப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

விரைவில் கிணறுகள் அமைக்கும் பணிகள் நடத்திமுடிக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு அவை விடப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (352)

# உடையார்கட்டுப் பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பம்

புதுக்குடியிருப்பு,ஜூன்8

உடையார்கட்டு குளத்தின் கீழ் உள்ள வயல்களில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டு உடையார் கட்டுக் குளம் விடுதலைப் புலிகளால் புனரமைப்புச் செய்யப்பட்டு நீர் தேக்கி வைக்கப்பட்டு பின்னர் நீர்ப்பாசனத்துக்கு விடப்பட்டது.

இக்குளத்தின்கீழ் மூங்கிலாறு, உடையார் கட்டு, குரவில், இருட்டுமேடு ஆகிய கிராமங்களில் உள்ள வயல் நிலங்களில் நெல் மற்றும் கச்சான் போன்றன செய்கை பண்ணப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இக்குளத்தின் கீழ் சிறுபோகச் செய்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

சிறுபோகச் செய்கை கணிசமான அளவு செய்யப்பட்டு வருகின்றது என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உபபயிர்ச்செய்கையிலும் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (353)

## இராமநாதபுரத்தில் அறநெறிப் பாடசாலை

வட்டக்கச்சி,ஜூன்8

இராமநாதபுரம், மாவடி ஸ்ரீமாரி அம்பாள் ஆலய அறநெறிப்பாடசாலை கடந்த 4ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.தர்மசூரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்கள் ஆலய முன்றிலிலிருந்து பாடசாலைக்கு மங்கள வாத்திய இசையுடன் அழைத்துவரப்பட்டனர்.

தொடர்ந்து மங்கள விளக்கேற்றலை அடுத்து அறநெறிப்பாடசாலையின் பெயர்ப் பலகையைக் கரைச்சிப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

அறநெறிப்பாடசாலைக் கட்டடத்தை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து அறநெறிப் பாடசாலை அதிபரும் மாவடி அம்மன் ஆலய ஓதுவாருமாகிய வியாக்கிரமபாதரின் தேவாரத்துடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் கிளிநொச்சி திருநெறிக் கழகத் தலைவர் வே.மகாலிங்கம், கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன், கிளிநொச்சி கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (405)

## உடுத்துறையில் மருத்துவ முகாம்

பரந்தன்,ஜூன்8

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு, உடுத்துறை கிராம மக்களுக்கான மருத்துவசேவையொன்று தமிழீழ சுகாதார சேவையினரால் கடந்த 3ஆம் திகதி உடுத்துறை ஒன்பதாம் வட்டாரத்தில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடத்தப்பட்டது. பொதுமருத்துவச் சிகிச்சை, பற்சிகிச்சை, சுதேச மருத்துவச் சிகிச்சை, கண் பரிசோதனை போன்றன இந்த மருத்துவமுகாமில் நடத்தப்பட்டன. பெரும்பாலானோர் இதில் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றனர். (352)

# கரைச்சிப் பிரதேசத்தில் இன்று நடமாடும் சேவை

## காணிப் பிரச்சினை குறித்து ஆராயப்படும்

வட்டக்கச்சி,ஜூன்8

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராமங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகள் காணிச் செயலகத்தினரின் நடமாடும் சேவை மூலம் இனங்காணப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இதன் அடிப்படையில் இன்று வியாழக்கிழமை சிவநகர் பொதுநோக்கு மண்டபத்தில் காணிச் செயலக நடமாடும் சேவையொன்று நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் உருத்திரபுரம் மேற்கு, உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் வடக்கு, சிவநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது காணி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன் இந்நடமாடும் சேவையின் போது புதிய காணிப்பதிவுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட கிராமங்களைக் சேர்ந்த மக்கள் காணி தொடர்பான பிரச்சினைகள் இருப்பின் உரிய ஆவணங்களுடன் வருகைதந்து காணிப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுமாறு காணி அலுவலர் செ.ஸ்ரீ ரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (405)

## உப்பு அறுவடை நிகழ்வு

ஆனையிறவு உப்பு உற்பத்திப் பேட்டையின் 2006ஆம் ஆண்டுக்கான உப்பு அறுவடையின் ஆரம்ப நிகழ்வு கடந்த புதனன்று நடைபெற்றது.

உப்பு உற்பத்திப் பேட்டை முகாமையாளர் யோகலிங்கம் தலைமையில் குறிஞ்சாத் தீவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் கலந்துகொண்டு உப்பு அறுவடையைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.(405)

## வீதிகள் புனரமைப்பு

இராமநாதபுரம் மேற்குக் கிராம அபிவிருத்திச் சங்க எல்லைக்குட்பட்ட ஒரு சில வீதிகள் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் அப்பிரதேச மக்களின் பங்களிப்புடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

பழையகண்டி வீதியில் இருந்து இராமநாதபுரம் பிரதான வீதிக்குச் செல்லும் கீறோ மூன் பள்ளி வீதி, அதன் குறுக்கு வீதி, இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திற்குச் செல்லும் வீதி ஆகியனவே புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இந்த வீதிகள் நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் குண்டும்குழியுமாக மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (405)


## பிரத்தியேக பாதுகாப்புச் சேவை - 2006
## இலங்கைப் போக்குவரத்துச் சபை (வடக்கு)

இலங்கைப் போக்குவரத்துச் சபை (வடக்கு) சாலைகளுக்கான பாதுகாப்புக் கடமைக்காக பிரத்தியேக பாதுகாப்புச் சேவையினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| 1. யாழ். சாலை | காலை 06.00 - 18.00 - 05 பேர் |
| | மாலை 18.00 - 06.00 - 06 பேர் |
| 2. யாழ். பேருந்து நிலையம் | காலை 06.00 - 18.00 - 03 பேர் |
| | மாலை 18.00 - 06.00 - 02 பேர் |
| 3. மல்லாகம் வேலைத்தளம் | மாலை 18.00 - 06.00 - 01 ஆள் |
| 4. பருத்தித்துறைச் சாலை | காலை 06.00 - 18.00 - 03 பேர் |
| | மாலை 18.00 - 06.00 - 03 பேர் |
| 5. காரைநகர்ச் சாலை | காலை 06.00 - 18.00 - 03 பேர் |
| | மாலை 18.00 - 06.00 - 03 பேர் |
| 6. மன்னார் சாலை | காலை 06.00 - 18.00 - 04 பேர் |
| | மாலை 18.00 - 06.00 - 04 பேர் |

ஒவ்வொரு சாலைகளிலும் பாதுகாப்புக் கடமை புரிவதற்கு ஒரு நாளைக்கு 12 மணித்தியாலங்களுக்கு ஒருவருடைய வேதனத்தைக் குறிப்பிடவும்.

**விண்ணப்பிக்க விரும்புபவர்கள்:**

1. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "*பிரத்தியேக பாதுகாப்புச் சேவை 2006*" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் "*பொதுமுகாமையாளர், இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு), பலாலி வீதி, கோண்டாவில்*" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
2. சேவைகள் திருப்தியற்றதாகக் காணும் பட்சத்தில் ஒரு மாத கால முன்னறிவித்தலுடன் சேவை இடைநிறுத்தம் செய்யப்படும்.
3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நகல் தகவல்களை விண்ணப்பப் படிவத்தோடு இணைத்தல் வேண்டும்.
   1. பெயரும் விலாசமும்
   2. தொலைபேசி இல.
   3. சேவைப்பதிவின் இலக்கமும் திகதியும்
   4. சேவையின் தன்மை
   5. பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்கடிதம்
   6. வங்கியின் பெயர்

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: **2006-06-15**

குறிப்பு: கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.

**க.கணேசபிள்ளை**
பொதுமுகாமையாளர்,
இலங்கை போக்குவரத்துசபை (வடக்கு),
கோண்டாவில்.

(சி/49553) (24-19)



## அறிவித்தல்

**யாழ்.கிளையில் விற்பனை முன்னேற்ற அதிகாரியாக கடமையாற்றி வந்த பத்தன் முருகவடிவேல் என்பவர் எமது கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியில் தற்பொழுது பணியில் இல்லை.**

**எனவே அவருடன் கம்பனி சார்பில் எதுவித தொடர்பையும் வைக்கவேண்டாமெனக் கேட்டுக்கொள்வதுடன், அவ்வாறு தொடர்புகள் ஏதாவது வாடிக்கையாளர் வைப்பின் அதற்கு கம்பனி பொறுப்பு ஏற்றுக்கொள்ளாது என்பதை சகல வாடிக்கையாளர்களுக்கும் தாழ்மையுடன் அறியத்தருகின்றோம்.**

முகாமை இயக்குநர்,
*கூட்டுறவு காப்புறுதிக் கம்பனி,*
*455, காலி றோட், கொழும்பு - 3*

(சி-49573)



## அழைப்புக் கட்டளை

இல. 16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னும் இடத்திலுள்ள/மாவட்ட நீதிமன்றில்

தர்மிளா குணசீலன்
(விவாகத்திற்கு முன்னர் கந்தசாமி தர்மிளா)
மே/பா சு.சிங்கராஜா,
இல.122, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

வழக்கு இலக்கம்:- மணநீக் /614 வழக்காளி

எதிராக

தர்மலிங்கம் குணசீலன்
தவசிக்குளம், மிருசுவில்.
எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி மணநீக்கம் கோரி இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பினும் 2006ஆம் ஆண்டு 06ஆம் மாதம் 16ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரர் இல்லாமலே விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றை கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

தயாரித்தவர் — நீதிமன்ற கட்டளைப்படி
சி.கனகசிங்கம், — து.சிறீமோகன்
வழக்காளியின் சட்டத்தரணி — பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காகப் பகிரங்க நீதிமன்றத்தில் இவ் வழக்கு கூப்பிடும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றினை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்கு தேவையான முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன் பதிவாளர்.

(50920)(32-24-19)

2006ஆம் ஆண்டு 05ஆம் மாதம் 23ஆம் நாளாகிய இன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரப் பெருமை மிகுந்த நல்லூர் சிவன் கோயில்

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி ஆலயத்தினதும் (நல்லூர் சிவன் கோயில்) புதிதாக நிறுவப்பட்ட இரண்டு இராஜ கோபுரங்களினதும் மஹா கும்பாபிஷேகம் இன்று இடம்பெறுகின்றது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.



நல்லூரைச் சேர்ந்த வெங்கடேஸ்வர ஐயர் சுந்தரம்மா தம்பதிகளின் புதல்வரான சிவஸ்ரீ ந.வே.கார்த்திகேயக் குருக்கள் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சிறப்பை உடையது இந்த சிவாலயம்.

சிவஸ்ரீ ந.வே.கார்த்திகேயக் குருக்கள் அவர்கள் சேர்பொன்.இராமநாதன் அவர்களுக்குக் குருவாக மட்டுமன்றிச் சோதிடரா கவும் திகழ்ந்து தெய்வமென மதிக்கப்பெற்று வந்தவர். தம்பையாக் குருக்கள் எனவும் இவர் சிறப்பாக அழைக்கப்பட்டவர்.

திருநல்லைப் பதியில் ஓங்கும் புண்ணியமார் கல்வளவிற் புனிதமான இந்த கைலாசநாத சுவாமி ஆலயத்தில் 1915 ஜூன் 27 ஆம் நாள் ஆனி மூல நன்னாளில் முதலாவது பிரதிஷ்டை இடம்பெற்றது.

தந்தையாரைத் தொடர்ந்து அவரின் மைந்தர்களான அமரர் பேராசிரியர் சிவஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்களினாலும் அவரது சகோதரரும் முன்னேஸ்வரம் ஆதீன கர்த்தாவுமான சிவஸ்ரீ கா.இரத்தின கைலாசநாதக் குருக்கள் அவர்களாலும் பரிபாலனம் செய்து வரப்படுகின்ற இவ்வாலயத்தில் 1988 ஆம் ஆண்டு மூலஸ்தான தூபிகள் புனரமைக்கப்பட்டும், முன்பக்க சிற்ப வேலைகள் செய்யப்பட்டும் இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தற்போது சுவாமிக்கும் அம்பாளுக்கும் தனித்தனியாக இரு இராஜ கோபுரங்கள் புதிதாக அமைக்கப்பெற்றுள்ளதுடன் பொது மண்டபம், பிரதான ராஜ வீதி, தெற்கு வாசல், நுழைவாயில் வளைவு, ஆலய பிரகார நிலம், கொட்டகை என்பன அமைக்கப்பெற்று ஒரு நிறைவான நிலையில் இக் கும்பாபிஷேகம் நிகழுகின்றது.

சுவர்ண, ரஜத, அஷ்ட பந்தன சமர்ப்பணத்துடன் சுவாமிக்கும் அம்பிகைக்கும் நவகுண்ட, நலகண்ட, பஷமாக பிரதிஷ்டையும் நூதன கோபுரங்களுக்கு பஞ்சகுண்ட பஷ பிரதிஷ்டையும் பரிவார மூர்த்திகளுக்கு பத்தொன்பது யாகசாலைகளுடனுமாக 47 யாக குண்டங்களுடன் கூடிய ஒன்பது நாள்கள் அதி உத்தம பட்ஷ மகா யாக பூஜை ஹோமங்களுடன் இக் கும்பாபிஷேகம் நிகழ்கின்றது.

வட்டுக்கோட்டை நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியாரால் பாடப்பெற்ற ஈழத்துத் தல புராணங்களில் ஒன்றான ஸ்ரீ கைலாசநாத புராணத்தால் பாடப்பெற்ற சிறப்புடைய இத் திருத்தலத்தில் பஞ்ச மூர்த்தங்களும் வடக்கு நோக்கி இருப்பதும் சுவாமி அம்பாளும் சமான நிலையில் சுவாமிக்கு வலது புறம் நித்தியகல்யாண கோலமாக அம்பிகை வீற்றிருந்து அருள் புரிவதும் இத் திருத்தலத்திற்கு உரிய சிறப்பான திருவருட் கடாட்சமாகும்.

சோதிட நிலையம், நியந்த்ரீ என்னும் சமூக அமைப்பு பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் ஆய்வுமையம் போன்ற சமூக அமைப்புக்கள் ஆலயத்தை மையமாகக்கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கது.

மக்களுடைய திருமண வைபவங்கள், சாந்தி பரிஹாரங்கள் என்பனவும் தொன்று தொட்டு இவ்வாலயத்தில் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. இச் சிவாலயத்திற்கு உரிய தனித்துவமாக இயம சங்ஹார விழா, சிவராத்திரி, சோமவாரம் திருவெம்பாவை உற்சவம் என்பனவும் அம்பிகைக்குரிய நவராத்திரி விழாவும் அமைகின்றன.

பிரதி வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளிலும் பௌர்ணமி தினத்திலும் ஸ்ரீ சக்கர நவாவரண பூஜையும் சுக்கிரவார சிவலிங்க அபிஷேகமும் இங்கு நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

**பிரம்மஸ்ரீ ஸ்ரீ.கிருஷ்ணானந்த சர்மா**
**ஸ்தானிகர், நல்லூர் சிவன் கோவில்**

இச் சிறப்புக்கள் பொருந்திய இச் சிவாலயத்தில் இன்று இடம்பெறும் கும்பாபிஷேக வைபவத்தை தேவஸ்தான தர்மகர்த்தா சிவஸ்ரீ கா.இரத்தினகைலாசநாதக் குருக்கள் மற்றும் சிரேஷ்ட சிவாச்சாரியார்களான கலாநிதி சித்தாந்தபானு கோவை சுப்பிரமணியக் குருக்கள், முன்னேஸ்வரம் தியாகராஜக் குருக்கள் ஆகியோரின் ஆசிகளுடன் சர்வபோதகாச்சாரியார் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்களின் அனுசரணையுடன் பிரதிஷ்டா பிரதம குருமாராக முன்னேஸ்வரம் சிவஸ்ரீ ஸ்ரீனிவாசக் குருக்களும் கோப்பாய் சிவஸ்ரீ ப.முத்துக்குமார சுவாமிக் குருக்களும் இணைந்து நிகழ்த்துகின்றனர்.

## நூல் அறிமுக விழா

குருநகரைச் சேர்ந்த மா.கி. கிறிஸ்ரியனால் எழுதப்பட்ட 'புயலுக்குப் பின் நாவல்' நூல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருநகர் இளைஞர் கலைக் கழகத்தின் ஆதரவுடன் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு நெய்தலம் இயக்குநர் கலாநிதி அருட்திரு. அ.பி. ஜெயசேகரம் அடிகளார் தலைமை தாங்கவுள்ளார். ஆசியுரையை குருநகர் பங்குத் தந்தை வணபிதா ஆர். எச்.சகாயநாயகம் அடிகளாரும் நூலிற்கான அறிமுகவுரையை நியோ கல்சரல் கவுன்ஸில் இயக்குநர் வி.ஜே. கொன்ஸ்ரன்ரைனும் சிறப்புரையை யாழ். திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரும் நிகழ்த்த உள்ளனர். (51)

## ஆங்கில மொழித்திறன் பயிற்சி முகாம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான இருநாள் ஆங்கில மொழித் திறன் பயிற்சி முகாம் மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கடந்த திங்கள் ,செவ்வாய்க்கிழமைகளில் நடைபெற்றன.

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றில் தரம் 4, 5 ஆகிய வகுப்புகளில் கற்கும் 210 மாணவர்களும் 40 ஆசிரியர்களும் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆங்கில பாடப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுடன் மாகாண கல்வி அமைச்சைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் என். அனந்தராசா பயிற்சி முகாமை நடத்தினார்.

மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 4, 5 ஆகிய வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களுக்கும் பயிற்சியுடனான கலந்துரையாடல் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.தேவநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் வலயத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கருத்துரை வழங்கினர். (117)

# ஒற்றையாட்சியா, சமஷ்டித் தீர்வா? முடிவை அரசு வெளியிடவேண்டும்!

## ஐ.தே.கட்சி கோரிக்கை

கொழும்பு, ஜூன்8

நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சியின் கீழ்தான் தீர்வு காண்பது என்ற நிலைப்பாட்டை அரசு கொண்டிருக்கிறதா, இல்லாவிட்டால் சமஷ்டி முறையின் கீழ் தீர்வை வழங்கத் தயாராக இருக்கின்றதா என்பதை உடனடியாக வெளிப்படுத்தும்படி கோருவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்திருக்கிறது.

கட்சியின் நாடாளுமன்றக் குழு கடந்த திங்கள் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காணும் விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை உத்தியோக பூர்வமாகவும், தெளிவாகவும் அறிவிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசு கடைப்பிடித்துவரும் நிலைப்பாடுகள் பற்றி ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

அமைதி முயற்சிகளின் இறுதியில், ஒஸ்லோ மற்றும் டோக்கியோ தீர்மானங்களின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வொன்று காணப்பட வேண்டுமென்றே ஐ.தே.க. நீண்டநாள்களாக வலியுறுத்தி வருவதாகவும், ஆனால், இவற்றைக் கண்டுகொள்ளாத அரசு, ஒற்றையாட்சியின்கீழ் தீர்வொன்றைக் காண முயல்வதாகவும் கட்சி உறுப்பினர்கள் பலர் இங்கு சுட்டிக் காட்டினர்.

இதனையடுத்தே, இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சியின் கீழ் தீர்வா அல்லது ஐக்கிய இலங்கைக்குள்ளான சமஷ்டித் தீர்வா அரசின் நிலைப்பாடு என்பதைக் கேட்டறிவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் எழுத்துமூலம் வினவுவாரென்று கட்சி வட்டாரங்கள் கூறின.

ஒற்றையாட்சியின் கீழ் தீர்வுகாண்பது தான் அரசின் நிலைப்படாக இருக்குமாயின் அமைதி முயற்சிகளில் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை வாபஸ் பெறுவதற்கும் ஐ.தே.க. தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் உயர் மட்ட வட்டாரங்கள் கூறின. (க)

## கலைப்பீடப் பரீட்சைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன்8

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சையும் இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் முதலாம் வருட, இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சையும் நாளை முதல் நடைபெறவுள்ளன என்று பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இரு பீடங்களினதும் இரண்டாம் வருட மாணவர்களுக்கான அடிப்படை விஞ்ஞான (முதலாம் வருடத்தில் நடைபெறத் தவறிய) பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இராமநாதன் நுண்கலைக்கழக முதலாம் வருட, இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு அறிமுறைப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும். செய்முறைப் பரீட்சைகள் தொடர்பாக மாணவர்கள் தத்தமது துறைத்தலைவர்களைத் தொடர்பு கொள்ளுமாறுகேட்கப்பட்டுள்ளது. கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களுக்கான அடிப்படை விஞ்ஞானம் மற்றும் கணனி அறிவுப் பரீட்சைகள்எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

பரீட்சை அட்டவணைகளை கலைப்பீட விளம்பரப் பலகைகளில் பார்வையிடலாம் எனவும் பதிவாளர் தெரிவித்தார். (202)

## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி, ஜூன்8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (117)

## திருக்கேதீஸ்வரத்துக்குச் செல்லும் பக்தர்கள் மீது படையினர் கெடுபிடி

மன்னார், திருக்கேதீஸ்வர திருவிழாவுக்குச் செல்லும் பக்தர்கள் மீது படையினர் சோதனைக் கெடுபிடிகளை மேற்கொள்கின்றனர் என்று பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

திருக்கேதீஸ்வரத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

வருடாந்தம் இந்த ஆலயத் திருவிழாவுக்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வருவது வழமை.

எனினும், இம்முறை படையினரின் சோதனைக்கெடுபிடிகள் காரணமாக மிகவும் குறைவான பக்தர்களே ஆலயத்துக்கு வருகை தருகிறார்கள் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆலயத்துக்கு அருகில் உள்ள கிராமங்களில் இருந்து செல்லும் பக்தர்களைக் கூட படையினர் கடுமையான சோதனைக் கெடுபிடிகளுக்கு உள்ளாக்குகின்றனர் என்று கூறப்பட்டது.

இது தொடர்பாக மன்னார் அரச அதிபர் சு.விஸ்வலிங்கத்துக்குத் தெரியப்படுத்தப் பட்டதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இன்று வியாழக்கிழமை அங்கு தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. இந்த நிலையில் சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு படையினரின் சோதனைக் கெடுபிடிகளைத் தளர்த்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (க)

## 2 இளைஞர்களின் சடலங்கள் கிளிவெட்டிப் பகுதியில் மீட்பு!

திருகோணமலை மாவட்டம் மூதூரில், மட்டக்களப்பு வீதியில் கிளிவெட்டி தங்க நகர் என்ற இடத்தில் தலையில் சூட்டுக் காயங்களுடன் இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

மூதூரில் அரச கட்டுப்பாட்டிலுள்ள தங்க நகர் தமிழ்ப் பாடசாலைக்கு அருகில் நேற்று முன்தினம் காலை இந்த சடலங்கள் மீட்கப்பட்டன.

சம்பவத்துக்கு முதல்நாள் இரவு 7.30 மணியளவில் இந்தப் பகுதியில் சூட்டுச் சத்தங்கள் கேட்டன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். எனினும், பயத்தினால் எவரும் வெளியில் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## மட்டக்களப்பில் இரு சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு,ஜூன்8

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை - கல்குடா வீதி கும்புறுமூலை என்ற இடத்தில் கடந்த திங்கள் இரவு இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இருவரையும் படையினரே சுட்டுக் கொன்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, இச்சம்பவம் இடம்பெற்ற வேளை பெருமளவான படையினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். (க)

## வர்த்தகர் சங்கத்தின் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன்8

குருநகர் நவீன சந்தையில் மரக்கறிகள் உயர்வான விலைகளுக்கு விற்கப்படுவதாக அண்மையில் (29.05.2006) உதயனில் வெளிவந்திருந்த செய்தியை குருநகர் வர்த்தக சங்கத்தினரும் அதன் உறுப்பினர்களும் மறுத்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் மரக்கறிகளின் விலைகள் பொதுவாக எல்லா இடங்களிலும் அதிகரித்திருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதுடன் ஏனைய இடங்களில் விற்பனை செய்யும் விலையிலேயே குருநகர் சந்தையிலும் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்

28 - 12 - 1977

மறைவு

10 - 04 - 2006

திதி: துவாதசி

08.06.2006

அமரர்

# செல்வேந்திரா பிரதீப்குமார்

காற்றோடு வந்தெம்மை
கதிகலங்க வைத்த செய்தி
பொய்யாகிப்போய் நீயும்
மீண்டும் வரமாட்டாயோ?

நெஞ்சோடு கூடு கட்டி
நேற்று வரை கூவிநின்றாய்
சொந்தம் எல்லாம் மறந்து நீ
கானம் பாட எங்கு சென்றாய்

போன வழி மறந்ததால் நீ
மீண்டு வர முடியாமல்
காற்றோடு கலந்து எங்கு
நீ வாழ்கின்றாய்

சற்றும் நாம் நினைக்கவில்லை
சுற்றமெலாம் மறந்து நீ
மாற்றுலகம் தேடி
பாதியிலே பயணிப்பாய் என

ஏன் என ஏங்கி இன்று
விடைகாணும் முன்னே
இரு திங்கள் கடந்திங்கு
நாளொன்றும் ஆகியதே

வேராகித் தாங்கி நின்ற
நீ சரிந்து போனதால்
விழுதுகள் நாம் இன்று
வழியின்றித் தவிக்கின்றோம்

நேற்று நடந்த கதை
நெஞ்சோடு நிற்கட்டும்
மறுபிறவியினிலும்
உன் உறவு எம்மோடு சேரவேண்டும்
இறுதிவரை தொடரவேண்டும்

உன் ஆத்மசாந்திக்காய் என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று (08.06.2006) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்களா வீதி, மல்லாகம். குடும்பத்தினர்.

(50950)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்மிகு அல்வாய் வேவிலந்தை

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான

## புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்- 08.06.2006



## பிரதம குருவின் ஆசி



அருள்மிகு அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்பாளுக்கு புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி, மங்கள விய வருஷ வைகாசி மாதம் வியாழக்கிழமை, சுவாதி நட்சத்திரமும் கூடிய காலை 6.25 மணி முதல் 8.20 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் விழாக்காணும் பேறு கிடைப்பதையிட்டு பேரானந்தத்தில் அனைவரும் திளைத்துள்ளோம்.

அம்பாளின் கடைக்கண் பார்வையினால் சகல செல்வங்களும் பக்தியும் நிறைந்து, அல்வாய்ப் பதியிலே எழுந்தருளி சகல ஆன்மாக்களுக்கும் நித்திய அனுக்கிரமும், 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்ற சொல்லிற்கமைய எல்லா நன்மைகளும் அனைத்து அடியார்களுக்கும் கிடைக்க வேண்டி, அன்னையின் திருவடிகளை பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்
'முக்கண்ணியைத் தொழுவார்கொருதீங்கு இல்லையே'

பிரதிஷ்டா பிரதமகுரு
சிவாகம கிரியாநிதி, கிரியா துரந்தரர்,
கிரியா பூஷணம், ஸ்ரீசக்தியாகம
வித்துவ சிரோன்மணி
**பிரம்மஸ்ரீ சதாசிவ சுரேஸ்வரக்குருக்கள்**
(தேவஸ்தான பிரதமகுரு)

## பெரும் ஆனந்தம் தரும் திருநாள்



இலங்கையில் உள்ள புகழ்பெற்ற அம்மன் ஆலயங்களில் ஒன்றாக அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் அடியவர்களுக்கு அருளை அள்ளி வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார். அருள்பாலிக்கும் அன்னைக்கு நீண்ட காலமாக இராஜகோபுரம் இல்லாமல் இருந்தது பெரும்குறையாகக் காணப்பட்டது. 2001ஆம் ஆண்டு சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா அன்று ஓய்வுபெற்ற நீதிபதி திரு.ஏகநாதன் அவர்கள் அடியவர்களிடம் அம்பாளுக்கு விரைவில் இராஜகோபுரம் அமைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அவரின் விருப்பமும் அடியவர்களின் விருப்பமும் ஒன்றுகூடி அம்பாளின் ஆலயத்தில் இராஜகோபுரமும் மணிமண்டபமும் பார்ப்பதற்குப் கண்கொள்ளாக் காட்சியாக கைகூடியுள்ளன. 1999ஆம் ஆண்டு திருப்பணிச்சபையால் தொடங்கிய வேலைகளில் சித்திரத்தேர், கல்யாண மண்டபம், இராஜகோபுரம், மணிமண்டப வேலைகள் 2006ஆம் ஆண்டு முடிவுற்று 08.06.2006 வியாழக்கிழமை காலை 7.30 தொடக்கம் 8.20 மணிக்குள் இராஜகோபுரத்திற்கும் அம்பாளுக்கும் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெரும் ஆனந்தமடைகிறேன். அம்மன் இராஜகோபுரம் போன்று அதன் நிர்வாக சபையும், திருப்பணிச் சபையும் அதன் பணிகளால் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றன. இந்த உயர்ச்சியே எனது 34 வருட திருத்தொண்டை திருப்திகொள்ளச் செய்கிறது. இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு உள்ளூர் மற்றும் வெளிநாட்டில் வாழும் அம்பிகை அடியவர்கள் மனதில் மகிழ்ச்சி பொங்கி வழிகிறது. அம்பாளின் திருப்பணிக்கு வாரி வழங்கிய அடியவர்களுக்கும் மேற்படி திருப்பணி வேலைகளை மிகவும் கவர்ச்சியாக அமைத்துத் தந்த ரூபின்ஸ் ஸ்தாபனத்தாருக்கும் அன்னை அருள்பாலிக்க செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**சி.கணேசமூர்த்தி,**
**தலைவர்,**
**பரிபாலனசபை, திருப்பணிச்சபை**



## இனியவளே அருள் தருவாய்

ஆனைமுகத்தானுடன் ஆறுமுக வேலனுமாய்
கங்கை வார் செஞ்சடையான் பாகமாயமர்
மங்கையர் குலம் தளைத்தோங்க வந்துதித்த
அல்வை முத்துமாரியம்மையே சரண்

அலைவாய் கடல் தாண்டி வந்து
அல்வையிலே அரும் பொருளாக உதித்தவளே
காவியம் படைத்த கஜமுகனைப் பெற்று
கதிர் வேலை பொய்கையிலே அணைத்தவளே
கார் குழல் விரித்து கரு விழி பார்த்து
கையிலே சூலாயுதம் எடுத்து கயவரை அழித்தவளே
சக்தியாக வந்து சடுதியில் வரம் தந்தே
சான்றோர் உனைப் போற்றும் சர்வலோகம் கொண்டவளே

வேம்பினை துணையாகக் கொண்டு
வேதனை தணிய மருந்தாக வந்தவளே
இலந்தையது உன் நாமம் கூறும்
இலுப்பையது நின் புகழ் பாடுபவளே
சில்லென்ற காற்றும் சீறிவந்திங்கு
சிரிப்பொலியுடன் வாகையது கொண்டவளே
நறுமலர் சோலை நடுவில்
புள்ளினங்கள் வந்தே பண்ணுடன் கவிபாடுபவளே

வாசலிலே வரவழைக்க
வண்ண வளைவுக் கோபுரமானவளே
பத்தினியாள் பாதையினிலே
பசியாற படர் மண்டபமானவளே
தங்க நிறமதை தாங்கி நிற்கும் மணியது
தரணியில் அனைவரையும்.
தட்டியெழுப்பும் ஓசையானவளே
தரிசிக்க மணிமண்டபமும்
தாங்க நின் தவமடியாளே

கார் மேகத்தைக் கிழித்து
கதிரவனை தொட்டிடும் ராஜகோபுரமானவளே
எண்டிசையும் அருள் சுரக்க
எழில் மிகு பார்வையானவளே
பூங்கோதையாள் ஊஞ்சலாடி மகிழ
பூங்கா தடாகமாய் முற்றம் கொண்டவளே
பரிவாரங்கள் உன்னருகே
பாரினிலே நின் தாழ் பணிய அருள் புரிவாய் அம்மையே!

ஆக்கம்: த.யோகநாதன் (அல்வையூர் யோகி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகலாத நினைவஞ்சலி

**19 ஆம் ஆண்டு நினைவு**



தோற்றம் 22 - 04 - 1901 மறைவு 08 - 06 - 1987

**தியாகராஜா இராஜசிங்கம்**

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

**15 ஆம் ஆண்டு நினைவு**



தோற்றம் 07 - 07 - 1934 மறைவு 25 - 05 - 1991

**இராஜசிங்கம் இராஜமனோகரன்**

(பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்)

(சி/49577)(26.19.14)

'இராஜகிரி'' தெல்லிப்பழை. குடும்பத்தினர்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 74 ஆம் ஆண்டு பிறந்த, திருவாதிரை நட்சத்திரம் கிரகபாவம் 9, சட்டத்தரணி மணமகனுக்கு பொருத்தமான கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. முழு விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.2883, மே/பா உதயன். (சி/49582)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1973 இல் பிறந்த, லக்கினத்தில் செவ்வாய் உத்தரட்டாதி, கனடிய PR உள்ள மணமகனுக்கு படித்த, மெல்லிய, அழகான மணமகள் தேவை. 4 வயது வித்தியாசம் உள்ள மணமகள் விரும்பத்தக்கது. தரகர் தேவை இல்லை. விளம்பர இல.2884. மே/பா உதயன். (50964)

### தவறிவிட்டது

இல.152, நாயன்மார் வீதி, நல்லூரைச் சேர்ந்த வைத்திலிங்கம் தியாகராசாவின் மகன் தி.ரவீந்திரராசா என்பவருடைய G.C.E.O/L, G.C.E.A/L, பட்டதாரிச் சான்றிதழ்கள், மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆவணங்கள் உள்ளடங்கிய கைப்பை யாழ்.பஸ்நிலையத்தில் தவறவிடப்பட்டுள்ளது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 152, நாயன்மார் வீதி, நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (50948)

### இமயம் நாடகநூல்

மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான 11 நவீன நாடகங்கள் கொண்டது. எல்லாவகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை எழுதியது. சாகித்தியப் பரிசும் வடக்கு- கிழக்கு மாகாண சபையின் பரிசும் பெற்றது. (56957)

### வீடும் கடைகளும் வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் ஆறு அறைகள், இரண்டு கோல், சமயல் அறை, குளியல்அறை, வாகனத்தரிப்பிடம் சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடும் கடைகளும் வாடகைக்குண்டு. கிளினிக், களஞ்சியசாலை, அலுவலக உபயோகம், மொத்த வியாபாரம் மற்றும் ஏனையவற்றிற்கும் பொருத்தமான பாதுகாப்பான இடம். வெளிநாட்டு நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம். கொமர்சல் இன்சூரன்ஸ் வசதி செய்யப்பட்டுள்ளது. தொடர்பு: T.P.:0779063030, 0773276270. (56955)

# நகரசபை சாவகச்சேரி-கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 19.06.2006 ஆம் திகதி 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளின் பொருட்டு நிர்மாணப்பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) "தரம் எம்9" அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கு தகைமையுடையவராவார்.

ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூ. சதம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (வற்றுடன்) ரூ. சதம் |
|---|---|---|---|
| 01 | கைலாசபிள்ளை வீதி மீள் நிர்மாணம் | 8,500.00 | 575 .00 |
| 02 | காளி கோயில் வீதி தாரிடல் | 7,000.00 | 575 .00 |
| 03 | அம்மன் வீதி முதலாம் ஒழுங்கை தாரிடல் | 2,000.00 | 575 .00 |
| 04 | கத்தாப்படி வீதி தாரிடல் | 3,000.00 | 575 .00 |
| 05 | பெரிய அரசடி வீதி தாரிடல் | 4,500.00 | 575 .00 |
| 06 | மட்டுவில்- நுணாவில் எல்லை ஒழுங்கை தாரிடல் | 3,000.00 | 575 .00 |

கேள்விப் பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 15.06.2006 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப் படிவக்கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி "செயலாளர், நகரசபை, சாவகச்சேரி" என்ற முகவரிக்கும் இணைப்பிரதி " பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் 19.06.2006 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம், சாவகச்சேரி.
*06.06.2006* (சி/49581)(39.19.14)

**திருமதி கு.ஆறுமுகம்**
செயலாளர், நகரசபை, சாவகச்சேரி.

## இரதோற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூன்8

கோண்டாவில் கிழக்கு திருவருள் மிகு ஞானப்பழனி முருகன் ஆலய இரதோற்சவம் இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்திற்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

## புலமையாளர் அல்வாயூர் கவிஞர் மு.செல்லையா அவர்களின் நூற்றாண்டு விழாச்சபை அறிவித்தல்

மேற்படி விழாச்சபை அங்குரார்ப்பணம் செய்து செயற்பட்டு வருகின்றது. இச்சபையின் இணைத்தலைவர்களாக திரு.மா.அனந்தராசன் J.P., ஓய்வு பெற்ற அதிபர் திரு.செ.சதானந்தன் J.P. ஆகியோரும், இணைச்செயலாளர்களாக கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட கல்வியியல் விரிவுரையாளர் கலாநிதி மா.கருணாநிதி அவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட கல்வியியல் விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி அவர்களும், பொருளாளராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட தொலைத்தொடர்பு இயக்குநர் திரு.சி.கணேசலிங்கம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டதுடன் இருபதுபேர் கொண்ட நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இச் சபையின் காப்பாளராக கரவெட்டிப் பிரதேச செயலர் திரு.பொ.சத்தியசீலன் அவர்கள் விளங்குகின்றார். கவிஞரின் நூற்றாண்டு விழாவினையொட்டி அவருடைய ஆக்கங்கள் தொகுத்தும், நூற்றாண்டு விழா மலர் ஒன்றினையும் வெளியிடுவதுடன் நாடளாவிய ரீதியில் கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகிய போட்டியினையும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே புலமையாளர் அல்வாயூர் கவிஞர் மு.செல்லையா அவர்களின் ஆக்கங்கள் குறிப்பாக 1938 இல் இருந்து 1965 வரையான "ஈழகேசரி" "கலைச்செல்வி" காலப்பகுதிகளில் வெளிவந்த பல்வேறு ஆக்கங்கள் வைத்திருப்பவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**விழா அமைப்புக் குழுவினர்.**

*தொடர்பு முகவரி:-* திரு.மா.அனந்தராசன் J.P.
'தெய்வீகம்'
மனோகரா, அல்வாய்.

*(50936)(26.19.14)*

# நன்றி நவில்கின்றோம்

**எங்கள் நல்வாழ்விற்காக ஒளிவிளக்காய் வழியமைத்து எம்மை எல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட**

**அமரர்**

## இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்

(சிங்கம் அண்ணா)

**அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடன் ஓடி வந்து உதவிகள் பல செய்தவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தந்தி, தொலைபேசி, கடிதம் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், அன்னாரை நன்கு கவனித்த மருத்துவமனை மருத்துவர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் 04-06-2006 அன்று நடைபெற்ற அன்னாரின் இறுதிக்கிரியைகளின்போது நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் வழிபாடுகள், பிரார்த்தனைகள் நிகழ்த்தியோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டோருக்கும், இறுதிக்கிரியைகளை விதிமுறைப்படி செய்த குருக்கள் ஐயா அவர்களுக்கும், நேரில் வருகை தந்து பல வழிகளில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

(50944)(26.19.14)

**ஆர்.வி.ஜி.பீடி நிறுவனம்,**
**இல.58, நல்லூர் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

*மனைவி, மக்கள்,*
*மருமக்களும்,*
*ஆர்.வி.ஜி.பீடி நிறுவனத்தினரும்.*

## கரம் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்.வை.எம்.சி.ஏயினால் அங்கத்தவர்களுக்கு இடையே நடத்தப்படும் உள்ளக விளையாட்டுப் போட்டியின் கரம் போட்டி இன்று காலை 9 மணிக்கு வைஎம்சிஏ. மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (190)

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி இராசமணி (கோண்டாவில்)

கோண்டாவிலை வதிவிடமாகக் கொண்ட சின்னத்தம்பி இராசமணி அவர்கள் 03.06.2006 சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும் அமரர்களான இராசரத்தினம், இராசநாயகம், இராசேந்திரம், சிறிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சோதிராசா, சிவகுமரன், ஆனந்தராசா (தாசன் சிகையலங்கரிப்பு நிலையப் பங்காளர்), செல்வராசா (ஜேர்மனி), தயானந்தன் (சுவிஸ்), ராஜேஸ்வரி (தேவி), யோகேஸ்வரி (சுவிஸ்),யோகேஸ்வரன் (ஜேர்மனி), யோகராணி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் தவமணி, திலகவதி, பவானி, திலகா(ஜேர்மனி), தனயா (சுவிஸ்), சந்திரமோகன், ரவீந்திரன் (சுவிஸ்),ரஜனி(ஜேர்மனி), புஸ்பராசா(சுவிஸ்)ஆகியோரின் பாசமிகு மாமியும் சுசான் (ஜேர்மனி), சுசன் (சுசன் பியூட்டி சலூன் உரிமையாளர்), சுதன், நிசான், நிசாந்தி, நிசாந்தன், ராஜபிரகாஸ், ராஜகல்யாணி, ராஜகௌரி, ராஜாராம், சென்யா (ஜேர்மனி), அன்விஷன் (ஜேர்மனி), அஜானா (சுவிஸ்), ரிஷானா, கீதா (சுவிஸ்),சுபீஷன் (சுவிஸ்), லஷ்சிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (08.06.2006) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில். (50940)(26.19.14)

தகவல்: **பிள்ளைகள்**
தொ. இல.0776130382 , 0776170806

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வைகாசிப் பெருவிழா 2006

இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்:- நாளை (09.06.2006) வெள்ளிக்கிழமை
நேரம்:- காலை 9.30 மணி
தலைவர்:- நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
வரவேற்புரை: க.அருள்லிங்கம் *(பேரவைத் தலைவர்)*
வாழ்த்துரை:- இ.குழந்தைவேலு *(சச்சிதானந்தா ஆச்சிரமம், கைதடி)*
விருது பெறுபவர்:- குமாரசாமி கங்கை வேணியன்
விருது வழங்குபவர்: செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
பதிலுரை: விழா நாயகன்
நன்றியுரை: ந.அரியரட்ணம் *(பேரவைச் செயலாளர்)*

வெள்ளி காலை வழமைபோல் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேக ஆராதனையுடன் மேற்படி நிகழ்வுகள் ஆரம்பமாகும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
வழமைபோன்று வாராந்த நிகழ்வுகள் வரிசையில் க.ஆனந்தராசா (அன்னைதாஸன்) அவர்களின் இன்னிசை நிகழ்வு இடம்பெறும்.

செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு. (சி-49583)(21.191.14)
– பேரவையினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

785 நீலம்
விருச்சிகம்

06-06-2006
செல்லுபடியாகும் தொடர் இல. 4308262 - 4322557

வெற்றி இலக்கங்கள் **02 10 24 34**

**ஜக்பொட் பரிசு ரூபா 30,01,300/- வெல்லப்பட்டுள்ளது**

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 1,00,20,560/-
தொடர் இல. 5205215 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜூன் மாதம் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,15,354 | 10/- | 31,53,540/- |
| 2 இலக்கங்கள் | 28,995 | 20/- | 5,79,900/- |
| 1 இல+லக்கினம் | 28,579 | 30/- | 8,57,370/- |
| 2 இல+லக்கினம் | 2,632 | 100/- | 2,63,200/- |
| 3 இலக்கங்கள் | 786 | 500/- | 3,93,000/- |
| 3 இல+லக்கினம் | 64 | 5,000/- | 3,20,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | 1 | 30,01,300/- | 30,01,300/- |
| மொத்தம் | | | 89,68,310/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,76,420 | | 1,00,20,560/- |

இந்த வெள்ளிக்கிழமை
**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அனுராதபுரம் | 4319464-7-24 |
| மாத்தளை | 4311485-2-73 |
| இரத்தினபுரி | 4310138-5-33 |
| ஹம்பாந்தோட்டை | 4312632-5-91 |
| குருநாகல் | 4310691-0-70 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**மார்க்கண்டு இராசமலர்**
திதி: துவாதசி




அன்னை மடியில் 16-10-1946
ஆண்டவன் அரவணைப்பில் 24-05-2002

காலனவன் கட்டளையால் வானுலகம் சென்றிடினும்
ஞாலத்தின் மணிவிளக்காய் ஒளிர்ந்திட்ட அன்னையவள்
கோலத் திருவுருவம் என்றும் அழியாச் சித்திரமே..........

K.K.S. வீதி, மருதனார்மடம். (50972) (21.14.19) - குடும்பத்தினர்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நவரத்தினம் மனோன்மணி
பிறப்பு *27.09.1943*
இறப்பு *11.06.2003*

மூன்றாண்டுகள் முடிந்து போனாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சில்
முடியாமல் தொடரும்......

*3 ஆம் கட்டை,*
*கட்டைப்பிராய், யாழ்ப்பாணம்.*
-குடும்பத்தினர்.
(50967) (39.14.19.21)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் தவராஜா

காரைநகர் பூதனடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தவராஜா அவர்கள் நேற்று (07.06.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் (**C.T.B.**-நேரக்காப்பாளர் காரைநகர் சாலை) - உருக்குமணி தம்பதியரின் மகனும் சரஸ்வதியின் பெறாமகனும் பூமகளின் கணவரும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா(ஆசிரியர், வேலணை), சிவராஜா மற்றும் வெற்றிவேலு (புத்தளம்), தம்பிராஜா (காரைநகர்), லோகேஸ்வரி, மகேஸ்வரி, அழகேஸ்வரி(ஜேர்மனி), காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2006) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பூதனடைப்பு,*
*காரைநகர்.*
தகவல்,
மனைவி, தாய், மருமக்கள்.

## BARATHY
சித்தன்கேணி

**O/L DAY CLASS**

புதிய பிரிவு நடைபெறுகின்றன
திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி
காலை 8 - 12 மணி வரை

Note:
இதுவரை அனுமதிபெறாத மாணவர்கள் கவனத்திற்கு!
இடநெருக்கடியை தவிர்க்குமுகமாக இன்னும் 20 மாணவர்களுக்கு மட்டும்தான் அனுமதி வழங்கப்படும். அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.
(21.14.19) (50445)

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம் பீட்டர் ஜாக்சனின்
**கிங் - கொங் *King Kong***
தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
(சி-49188) காட்சி நேரம் : 10.30, 2.30

## ராஜா யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த
**பட்டியல்**
(சி-47139) புதிய வெளியீடு
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

## முக்கிய அறிவித்தல்

**புளியங்கூடல்**
**செருத்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான மகோற்சவ பெரும் திருவிழா பிற்போடப்பட்டுள்ளது.**
**திருவிழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

(50977) (39)
தேவஸ்தான
அறங்காவலர்.

## 60 ஆம் நாள் நினைவு அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் கணனித்துறைப் பயிற்றுநராக சிறப்புடன் கடமைபுரிந்து எம் நெஞ்சில் நிறைந்து வாழும்
அமரர்
**செல்வேந்திரா பிரதீப்குமார்**
அவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!
**ஸ்கந்தா கல்லூரிச் சமூகம்.**
கந்தரோடை, சுன்னாகம். (50980) (39.21.14.19)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி த.பிரியலஷ்சுமியின்
அன்புத் தந்தை
**செல்லையா தனபாலன்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் [illegible]
[illegible]
(50959) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## பொதுக்காப்புறுதித் துறையில் உடனடி வேலைவாய்ப்பு

**ISO 9001:2000** சர்வதேச காப்புறுதி தரச்சான்றிதழ் பெற்ற முதல்தர காப்புறுதிக் கம்பனிக்கு பொதுக்காப்புறுதித் துறையில் முகவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**தகைமைகள்:**
*1) G.C.E.O/L (தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி)*
*2) G.C.E.A/L மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.*
*3) வினைத்திறன் மிக்க தொடர்பு கொள்ளும் திறன்*

*விண்ணப்ப முடிவு திகதி 18-06-2006*
**இலக்கம் 2881,**
**மே/பா உதயன்**
*(50941)* *(26.14.19.21)*

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை *செல்வி மஞ்சுளா தங்கவடிவேலு* அவர்களின் அன்புத்தாய்
**அருந்தவநாயகி தங்கவடிவேலு**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

தோற்றம் 05-07-1932
மறைவு 06-06-2006

*கல்லூரிச் சமூகம்,*
**யா/விக்னேஸ்வராக் கல்லூரி,**
*கரவெட்டி.*
(50979)(26.14.19.21)

## மரண அறிவித்தல்கள்

### நகுலேஸ்வரன் தங்கேஸ்வரி



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரன் தங்கேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி) அவர்கள் 06.06.2006 செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் இறைபதமடைந்தார்.

அன்னார் தம்பிஐயா நகுலேஸ்வரனின் அன்பு மனைவியும் (சுதுமலை வடக்கு த.க. வித்தியாலயம், பிரதி அதிபர்), சிவதீபன் (பேராதனைப் பல்கலைக்கழக் விவசாயபீட இறுதியாண்டு மாணவன்), நிரோஷன்(பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட இரண்டாம் ஆண்டு மாணவன்), லோகப்பிரதாப் (மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற வைரவநாதர் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிஐயா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சரசானந்தராஜா, நாகேஸ்வரி, சிவநேசன், கமலாதேவி, காலஞ்சென்ற வைரவநாதன், கிருஸ்ணராஜா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தம்பிஐயா கமலேஸ்வரன் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), தம்பிஐயா பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற தம்பிஐயா ரவீந்திரன் (ஆசிரியர்), தம்பிஐயா கமலாகரன் , தம்பிஐயா மனோகரன் (கோப்பாய் ஆசிரிய கலாசாலை நுலகர்), தம்பிஐயா பாஸ்கரன் (லண்டன்), சின்னத்துரை கமலேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), குணசேகரம் ரஜனி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இணுவில் மேற்கு இணுவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூவுடல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.
(50962)(21.14.19.18)
தகவல்:
**தம்பிஐயா நகுலேஸ்வரன்**
(கணவர்)

### திருமதி சரஸ்வதி பஞ்சாட்சரம்

நீர்வேலி திருமதி சரஸ்வதி பஞ்சாட்சரம் 06.06.2006 செவ்வாய்க்கிழமை பிற்பகல் சிவப்பேறு பெற்றுள்ளார்.

அன்னார் கே.கே.எஸ். சிமெந்து ஆலை பொதுப்பணி முகாரி அமரர் கனகரத்தினம் பஞ்சாட்சரம் அவர்களின் பாரியாரும் சிவயோகி, இராசயோகி **(U.K)**, ஜெயதேவி (ஆசிரியை இந்து மகளிர்), சத்தியாதேவி, சாசிதேவி, ரதிதேவி (ஆஸ்திரேலியா), அமரர் கெங்காதேவி ஆகியோரின் பாசமிகு அன்னையும் சுஜிதன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), நித்தியானந்தன் (யாழ்.மாநகர சபை), சிவஅனுபூதிச்செல்வன் (ஆஸ்திரேலியா), வைத்திய கலாநிதி சிவகுமரன் (கனடா), விரிவுரையாளர் ஜெயராமன் (ஆஸ்திரேலியா), சட்டத்தரணி ரெங்கன் **(U.K)**, வைத்திய கலாநிதி இராஜம் தேவேந்திரா **(U.S.A.)**, திருமதி இராஜீஸ்வரி நிற்த்தனகுமரன் (ஆஸ்திரேலியா), முகாமைத்துவ பணியாளர் ரவீந்திரன் (கனடா), பொறியியலாளர் நமசிவாயம் **(U.S.A.)**, அமரர் முரளிகிருஸ்ணா (கனடா), ரஞ்சினி, ஸ்ரீசாந்தினி, இரத்தினாம்பிகை (கனடா), திருமதி சிவயோகி, திருமதி இராசயோகி (கனடா), திருமதி ரேவதி (கனடா), சங்கர், யசோ விஸ்வபாரதி **(U.S.A.)** ஆகியோரின் பாசமுள்ள மாமியாரும் அமரர்கள் தேவராஜன், நவரத்தினம், இராமநாதன், வீரசிங்கம் (யோகர்) ஆகியோரதும் பஞ்சாட்சரத்தினதும் பிரிய ஏக சகோதரியும் திருமதி பத்மதேவி தேவராஜன் **(U.K)**, திருமதி சரஸ்வதி நவரத்தினம் (கனடா), திருமதி விமலாதேவி இராமநாதன், திருமதி புஸ்பதேவி வீரசிங்கம் (கொழும்பு), அமரர் புஸ்பமலர் பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்புமிகு மைத்துனியும் உத்தமி, கார்த்திகேயன், துவாரகன், குருபரன், காயத்திரி, யாழினி தவநவேந்திரன், துவாரகா, சிவாசுரேந்திரன், அனுசியா மற்றும் அமரர் செல்வி பூரணியின் பாசமிகு அம்மம்மாவும் பூரணத்தின் அன்பான நண்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2006) வியாழக்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு அமரரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'அகிலேசர் வளவு',*
நீர்வேலி.
(50965)
(21.19.14)
தகவல்:
**த.ந.பஞ்சாட்சரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டர் ஆசிரியர்கள் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, துணுக்காய், ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடமைபுரியும் தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர சந்திப்புகள் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளன. முல்லைத்தீவு வலய தொண்டர் ஆசிரியர்களுக்கான சந்திப்பு முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொதுமண்டபத்திலும் -

துணுக்காய் வலய தொண்டராசிரியர்களுடனான சந்திப்பு பிற்பகல் 2 மணிக்கு துணுக்காய் வலயக் கல்வி அலுவலக மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இதேவேளை - கிளிநொச்சி கல்வி வலயத் தொண்டர் ஆசிரியர்களுடனான சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்புகளில் குறித்த வலயங்களில் கடமைபுரியும் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு தமிழீழ கல்விக் கழகத்தினர் கேட்டுள்ளனர். (405)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதி முயற்சிகளில்கூட நிலையான கொள்கையைப் பின்பற்றாமல் அரசு போருக்கான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஐ.தே.க. அரசியல் குழு உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கருத்து வெளியிட்டனர்.

இதனால், அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டப்பேரணிகள் மற்றும் பெருமளவிலான கூட்டங்களை நடத்துவதற்கு இந்தக் கூட்டத்தின்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. வெகுவிரைவில் இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக குழுவொன்றை நியமிக்க ஐ.தே.கட்சியின் தலைமை தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமைச்சர்களின் வாகன விவரங்கள் பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பத் தடை!

கொழும்பு, ஜூன் 08

அமைச்சர்கள் பயன்படுத்தும் வாகனங்களின் இலக்கங்கள் மற்றும் விவரங்களை நாடாளுமன்றத்தில் வெளியிடுவது விடுதலைப் புலிகளால் ஏற்படுத்தப்படக்கூடிய அச்சுறுத்தல்களுக்கு ஏதுவாகிவிடலாம். எனவே, அந்த விவரங்களை சபையில் பகிரங்கப்படுத்துவது தடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் முன்னெச்சரிக்கை விடுத்தார் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் கூடியது. அப்போது வாய்மூல விடைகளுக்கான கேள்வி நேரத்தின் போது ஐ.தே.கட்சி எம்.பி. ரஞ்சித் அலுவிகார, வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பாவிக்கும் வாகனங்கள் எத்தனை? அவற்றின் இலக்கங்கள் எவை? சாரதிகளின் பெயர்கள் என்ன? போன்ற கேள்விகளை எழுப்பினார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இக்கேள்விக்குப் பதிலளிக்கும்போது, தாம் பாவிக்கும் வாகனங்களின் இலக்கங்களைத் தெரிவித்தார்.

இச் சந்தர்ப்பத்திலேயே அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

அமைச்சர் பௌஸியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட சபாநாயகர், அமைச்சர்களின் வாகனங்களின் இலக்கங்களை வெளியிடும்படி கேள்விகள் கேட்பதை எம்.பிக்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அத்துடன், இதுவரை கேள்விகளுக்குப் பதிலாக அமைச்சர்களின் வாகன இலக்கங்கள் வெளியிடப்பட்டிருந்தால் அவற்றை நாடாளுமன்றப் பதிவேட்டில் (ஹன்சாட்) வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் பணிப்புரை விடுத்திருந்தார். (க)

## அகாஷி எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 08

அழிவின் விளிம்புக்கு முழு இலங்கையும் இன்று சென்றிருகின்றது என்று ஜப்பான் நாட்டின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி தெரிவித்தார்.

'அசோஸியேற் பிறஸ்' என்ற செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்த அவர், மோதலை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியதே இன்றைய அவசரத் தேவை என்று குறிப்பிட்டார்.

## நிலக்கண்ணிவெடியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடுருவி இந்தத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டிருக்கலாம் என்றும், இலக்குத் தவறியதால் இதில் சிவிலியன்கள் சிக்கியிருக்கலாமெனவும் கருதப்படுகிறது. இந்தச் சம்பவம் மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (க)


### காணவில்லை

சிவதொண்டன் நிலையத்திற்குரிய இரண்டு சிவப்புப் பசுக்களும், இரண்டு வெள்ளைக் கன்றுகளும் நேற்றுப் பிற்பகல் தானாகவே புறப்பட்டுவிட்டன. கண்டவர்கள் உடன் சிவதொண்டன் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். தொலைபேசி இலக்கம்: 021 222 2799

சிவதொண்டன் நிலையம்.

### சாரதி தேவை

கொழும்பில் தங்கி இருந்து வாகனம் ஓட்டக் கூடிய அனுபவம் உள்ள சாரதி தேவை. (தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்)

தொடர்பு: 0777 393827

(சி 49590)

### பிறைற்றின் கல்வி நிலையம்

சங்கத்தானை சாவகச்சேரி

A/L 2008, 2007

கலை, வர்த்தக

வகுப்புகள் நடைபெறுகின்றன

O/L Day Class நடைபெறுகின்றன

* தினமும் 7 a.m. - 1 p.m. (சனி, புதன் தவிர)
* கணித, விஞ்ஞான பாடங்கள் வாரத்தில் 5 மணித்தியாலங்கள்

### COMPUTER EXPRESS

Institute of Information Technology

இல.15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம் (off Stanly Rd.)

021-222 8250, 0777 222422

80% Off

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

Batch I :- 09/06/2006

Batch II :- 10/06/2006

Batch III:- 11/06/2006

### விக்னா

கல்வி நிறுவனம்

ஸ்ரான்லி வீதி, யாழ்

பொருளியல்

திரு.பா.கஜீதரன்

பகுதி 11 A/L 2007

பணம், வங்கி, பொது விலை மட்டம்

பிரிவு 1 : 7-8 am.

பிரிவு2 : 9-10 am.

பேரினப் பொருளாதாரம்

பிரிவு1: A/L 2008 10-11 am.

பொருளியல் பற்றிய அறிமுகம் (8-9 am.)

புதிய பிரிவு ஆரம்பம்.

10.06.2006 சனி 07.00 am.

(சி 49586)

### வணிகக்கல்வி

A/L 2007

பகுதி 11

ஆரம்பம்:

10.06.2006

Sat. 7 am.

By : யசோ

(50953)

BEACON



### UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons up to 21.06.2006 for the under mentioned posts.

**Faculty of Agriculture**

Assistant Lecturer (on contract) in:

Agronomy/Agricultrual Biology/Agricultural Chemistry/
Animal Science/Agricultural Economics/Agricultural Engineering

Demonstrator (on contract) in:

Agronomy/Agricutrual Biology/Agricultural Chemistry/
Animal Science/Agricultural Economics/Agricultural Engineering

Note: Candidates who are awaiting the result of the final degree examination may also apply for the Post of Demonstrator (on Contract):

| Post | Salary |
|---|---|
| Assistant Lecturer (on contract) | Rs.16870/- p.m. (Fixed) |
| Demonstrator (on contract) | Rs.14350/- p.m. (Fixed) |

Other allowances approved by University Grants Commission will also be paid

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments. either in person or by post, on a payment of Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 23x10 c.m in size.

Those who wish to apply **for more than one post** should apply in **separate appliction forms**

Application from the University System/Government Departments/Corporations and statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation.

Only the sorted list of candidates will be called for the interview.

2006.06.05 - REGISTRAR


## மரண அறிவித்தல்கள்



### நடராஜா சுவர்ணராஜா

யாழ்ப்பாணம், குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா சுவர்ணராஜா நேற்று (07.06.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ரேணுகாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கெக்கிராவ பிரபல வர்த்தகர் பூ.சு.நடராஜா-நாகேஸ்வரி தம்பதியரின் மகனும் நிஷந்தன், நிலக்ஷன், நிமல்ஷன் ஆகியோரின் அருமைத் தந்தையும் ரஜந்தினி, ராஹினி, சுவர்ணஹரன் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர்-மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் உமாநந்தினி, சஞ்ஜிதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 65/1, ஹம்டன் ஒழுங்கை, வெள்ளவத்தை இல்லத்தில் இன்று (08.06.2006) வியாழக்கிழமையும் 09.06.2006 வெள்ளிக்கிழமையும், பொரளை ஜயரட்ண மலர்சாலையிலும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி வரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*65/1, ஹம்டன் ஒழுங்கை, வெள்ளவத்தை.*

தகவல்: குடும்பத்தினர்.

தொ.பே : 011 2365583, 011 2365901

(சி 49599)



### திருமதி உதயகுமாரன் வசந்தகுமாரி

*(ஓய்வு பெற்ற பரிசாரகர், யாழ். போதனா வைத்தியசாலை)*

திருமதி உதயகுமாரன் வசந்தகுமாரி அவர்கள் 06.06.2006 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார். அன்னாரின் அடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*86/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்* (50986)

தகவல் : உதயகுமாரன் (கணவர்)

தொ.பே 021 4590307



### திருமதி விஜயலக்சுமி சிவசாமி

சரவணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விஜயலக்சுமி சிவசாமி நேற்று (07.06.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சுருவில் காலஞ்சென்ற விஸ்வலிங்கம்-விசாலாட்சி தம்பதியரின் அருமை மருமகளும் சிவசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம்-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் இராகுலனின் அன்புத் தாயும் சண்முகப்பிரியாவின் அன்பு மாமியும் கஜனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*இல.9 கல்லூரி வீதி கொக்குவில். 0776116267*

(50987)

தகவல்: வி.சிவசாமி (கணவர்)



### கண்ணீர் அஞ்சலி

*கைதடி விரகத்திப் பிள்ளையார் கோயில் நித்திய பூசகர்*

**பிரம்ம ஸ்ரீ வை.வெங்கடகிருஸ்ணசர்மா**

(குட்டிஐயா) அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(50921)

கைதடி.

நம்பிக்கை பொறுப்பாளர் பரிபாலனசபை, கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில், முதலாய கோயில்கள்.




### பாக்யா இசைப்பயிலகம்

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

* வாய்ப்பாட்டும் பண்ணிசையும் - செல்வி செ.வற்சலா (இசைக்கலைமாணி)
* வயலின் - திரு அ.ஜெயராமன் (இலங்கையின் முன்னணிக்கலைஞர்)
* மிருதங்கம் - திரு சதா.வேல்மாறன் (இலங்கையின் முன்னணிக்கலைஞர்)
* புல்லாங்குழல் - திரு கு.நக்கீரன் (இலங்கையின் முன்னணிக்கலைஞர்)
* ஓகன் - திரு ந.செல்வச்சந்திரன் (இசைக்கலைமணி RDPA)

பெற்றோர்களே!

உங்கள் குழந்தைகளை சிறந்த இசைக்கலைஞர்களாக உருவாக்க அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்

-இன்று முதல் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்-

பாக்யா காகிதாதிகள் இல-121 கே.கே.எஸ் வீதி கொக்குவில். தொடர்பு-0773053129.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.